Special Take-Away offers
& Set Lunch
Pride for Sri Lanka for winning the Best Restaurant Award for 2004
Sri Lankan and South Indian Restaurant
JAFFNA HOUSE
Fully Licenced
Tandoori Restaurant
90 High Street, Tooting, London SW17
Tel : 020 8767 6668/ 020 8672 7786
web: www.jaffnahouse.co.uk

புதினம்
PUTHINAM

அறுசுவை
Sri Lankan & South Indian Restaurant
100 மரக்கறி சாப்பாட்டுக்கு மேல் £2.00 (12 Items)
300 இடியாப்பம் சொதி சம்பலுடன் கறி – இலவசம்
100 இடியாப்பத்துக்கு மேல் £14.00
சனி, ஞாயிறு Buffet சாப்பாடு
Arru Suvai
19 Lee High Road, Lewisham
London SE13 5LD
Tel: 020 8297 6452, 020 8297 6562

16-31 AUGUST 2005

மலர்:10 38 Moffat Road, London SW17 7EZ Tel: 020 8767 8004 Fax: 020 8767 7866 email: raj@londonputhinam.co.uk இதழ்:15

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை
இப்போது 10வது ஆண்டு (1995 – 2005) பூர்த்தியின் பூரிப்பில்
WESTERN JEWELLERS
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நம்பிக்கையுடன்
நாடவேண்டிய இடம்
WESTERN JEWELLERS
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 020 8767 3445
WESTERN JEWELLERS
5 Plaza Parade
29-33 Ealing Road
London HA0 4YA
Tel: 020 8903 0909

Mortgage LINK The National Mortgage Network
100% Mortgage – எந்த விதமான Deposit இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
Home Owners – வீட்டு உரிமையாளர் கவனத்திற்கு, உங்கள் Mortgage வட்டி வீதத்தை குறைத்து மாதாந்தம் பெரும் தொகை பணத்தை சேமிக்க வழிசெய்வோம்.
குறைந்த Deposit உடன் Leasehold/Freehold வர்த்தகஸ்தாபனங்கள் வாங்க வேண்டுமா? Shops/Off Licence/Chicken Shop
Mobile: 07930 62 65 85, 020 8767 8487, 125B Mitcham Road Tooting, London SW17 9PE
YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED IN IT

லண்டனில் இந்திய ஹோமியபதி வைத்திய நிபுணர்
தீராத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் ஹோமியோபதி வைத்திய நிபுணர்
டாக்டர் தியாகராஜன்
மீண்டும் செப்ரெம்பர் 10 திகதி சிகிச்சை அளிக்க லண்டன் வருவார்
அதுவரை திருச்சி 0091 431 243 2946 இலக்கத்தில் ஆலோசனை பெறலாம்.
Tel: 020 8767 8004, 07833 341 693 (14ம் பக்கம் பார்க்க)

ராணுவம் வெளியேறவேண்டும்!

எதற்கும் ஒரு எல்லை உண்டு! எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பது?

முடியை வெட்டியதோடு நிற்காமல், முடிவெட்டும் ஊழியரையே ஈவிரக்கமின்றிசுட்டுக் கொன்றுவிட்டு, தவறுதலாக வெடித்திருப்பதாக வேறு 'கதை' விடுகிறார்கள்.

யாழ்ப்பாணம் இணுவில் சந்தியில் உள்ள முடி வெட்டுகிற 'கடையில், சமீபத்தில் நடந்த இக் கொடூரம், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களையே அதிர வைத்திருக்கிறது!

ராணுவத்தினக்கு முடிவெட்டுவதற்கு முகாம்களிலே வசதிகள் இருக்கின்றது. அப்படியிருந்தும் முடி வெட்டி முடிந்தும் அப்படியே போயிருக்க வேண்டியதுதானே!

இப்போது 'சாட்டு'க்கு கைது, நீதிமன்றம் என்றெல்லாம் 'றீல்' விடுகிறார்கள்!

ஒரே ஒரு உண்மை இப்போது தெட்டத் தெளிவாகப் புலனாகிறது: சிங்களக் கூலிப் படை தமிழர் தாயக்திலிருந்து வெளியேறும் வரை கை கட்டி, வாய்பொத்தி, நித்தம் நித்தம் நித்தம் சாவுக்கு அஞ்சி அஞ்சி அங்கு தமிழர்கள் வாழத்தான் வேண்டும்!

சமாதானம் நிலவுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இங்கிருந்து 'கொலிடே'க்கு படையெடுக்கிறோம். ஆனால் அங்கு சமாதானம் என்று சொல்லிக் கொள்வதில் எவ்வித அர்த்த்தமுமில்லை. யாழ்ப்பாணத்தில் கடைசியாக நடந்த இக் கோரச் சம்பவம் உண்மையை எடுத்துக் காட்டுகின்றது; திட்டமிட்ட கொலை அது.

தமிழ் மக்களை எந்த வகையிலாவது கொன்று அழிக்க வேண்டும் என்பதே படையின் வெறி. மூன்றரை வருடங்கள் ஆகிவிட்டன- சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு. என்ன நடக்கிறது? சிங்களப் படையினர் கொன்று குவிப்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுகின்றனர். புரிந்து உணர்வுக்குப் பதிலாக, அழிப்பதையே உணர்வாகக் கொண்டுள்ளனர்.

இருபதாண்டு காலத்துக்கு மேலாக நடக்கின்ற விடுதலைப் போராட்டத்தில் ராணுவம் கொன்று குவித்த தமிழர் தொகை ஆயிரமாயிரம். அந்தவெறி இன்னமும் தணியவில்லை. இரத்த வெறி அடங்காது இன்னமும் குண்டுகளைத் தீர்த்தபடி இருக்கிறார்கள்.

தமிழினத்தை ஏப்பம் விட்டு தமது அரசியல் நாற்காலிகளைக் காப்பாற்றிக் கொளவதே சிங்கள அரசியல் கட்சிகளின் நோக்கமே தவிர சமாதானத்தில் அவர்களுக்கு எவ்வித அக்கறையுமில்லை.

சிங்களக் கூலிப் படை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறும் போதுதான் தமிழர்களால் அங்கு நிம்மதியாக வாழ முடியும். எங்கள் மண்ணிலிருந்து எதிரி வெளியேறும் போதுதான் உண்மையான சுதந்திரத்தை தமிழர்களால் அனுபவிக்க முடியும்.

தொடர்ந்து அச்சத்தையும், பதட்டத்தையும் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் ஆபத்தானது. படை ஆக்கிரமிப்பிலிருந்து தமிழினம் விடுதலை பெறாவிடில், அச்சமும் பதட்டமும் நீடிக்கும்.

தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கு அரசியல்ரீதியிலான அரசியல் ரீதியிலான அணுகுமுறைகளைக் கையாண்டு தீர்வு காண வேண்டும் என்ற சிந்தனை நோக்கு, சிங்கள அரசுகளுக்கு இருக்குமாயின் தமிழனை அழிக்கின்ற நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்!

தாயக மண்ணிலிருந்து சிங்களப் படை வெளியேறுவற்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழர்கள் கொலை செய்யப்பட்டுக் கொண்டே இருப்பது தொடர்கதையாக நீளும்!

தீபம்
கோடைக்கால விசேட சலுகை: ஒரு வருட சந்தாவுடன் இணைப்பைப் பெற இப்போது £199 மட்டுமே!
Dish மற்றும் பொருத்தும் செலவுகள் இலவசம்!!
6ம் பக்கம் பார்க்க

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
Jewellers
276 High Street North, East Ham, London E12 6SA
Tel: 0208 470 5600 Fax: 0208 470 3448

திருமண வைபவத்திற்குத் தேவையான வைரத்தாலிக் கொடியிலிருந்து அனைத்து விதமான 22 கரட் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்!
அனைத்து 22 கரட் தங்க நகைகளை கண்கவர் வேலைப்பாடுகளுடன் உங்கள் எண்ணம் போல..
லக்சுமிஸ் ஜுவலர்ஸ்

நமக்கென்றோர் நகை மாளிகை ஒன்றல்ல... இரண்டு..
6 வது ஆண்டில் DIAMONDS PALACE
4 வது ஆண்டில் MITHUS
020 8683 1756
322 London Road,
Croydon CR0 2TJ
DIAMONDS PALACE
MITHUS Jewellery
அதிரடி மலிவு விற்பனை
செய் கூலி இல்லவே இல்லை!
020 8767 5333
76 Tooting High Street
London SW17 0RN

காளிகாம்பாள் ஜோதிட நிலையம்
Astrology Palmist

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள **கே.எம். சாஸ்திரி** அவர்கள் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி, ஆரோக்கியம் குடும்பப் பிரச்சனை ஆகியவை பற்றி விபரமாக அறிந்து கொள்ள இன்றே அவரை நாடுங்கள். இன்னமும் சில தினங்களே இங்கு தங்கியிருப்பார்.

குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்
சனி	ராசி நிலை		சந்திரன்
சனி			சூரியன்
குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்

நவக்கிரகங்களால் ஏற்படும் தொல்லைகளுக்குப் பரிகாரம் காணப்படும்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

Welcome Centre

209 High Street North, Eastham, London E6 1JG
(Opposite Eastham Tube Station)
Sunday & Monday only
Mobile: 07949 923 133

பார்வையிடும் நேரம்: காலை 9.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை

SAMRAS 2000 VIdeo Shop

174 Tooting HIgh Street, Tooting, London SW17 0RX
(Near Tooting Broadway Station)
(Opposite Benz Company)
From Tuesday to Saturday
Mobile: 07949 923 133

பார்வையிடும் நேரம்: காலை 10.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை

புதிய அலைவரிசையில் சங்கமம்

உங்களின் 'சங்கமம்' வானொலி இப்பொழுது புதிய அலை வரிசையில் யூற்றல் HOTBIRD செய்மதியில் FR 11013-SR 27500 என்ற அலைவரிசையில் 24 மணிநேரமும் TP: 020 8795 0093

மணமகன் தேவை

இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பதினெட்டு வயது இந்து சமய பெண் G.C.E. O/L வரை படித்துள்ளார். இருபத்தேழு வயதுக்குட்பட்ட, நிரந்தர உத்தியோகம் உள்ள, பிரித்தானிய பிரஜாவுரிமை உள்ள, இந்து சமயத்தைச் சேர்ந்தவர் வேண்டப்படுகிறார். விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டி முகவரி: **A Hutton, 32 Downs Croft, Burges Hill, West Sussex RH15 0UF.**

புதினம்
Puthinam

லண்டனிலிருந்து வெளியாகும் மாதமிருமுறை இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே. ராஜகோபால்
Mob: 07886 921177

'ஈழகேசரி' வெளியீடு நிறுவனத்துக்காக 10 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவரும் மாதமிருமுறை இலவச இதழுக்கான அனைத்துத் தொடர்புகளுக்கும்:

PUTHINAM
38 Moffat Road
London SW17 7EZ
Tel: 020 8767 8004
Fax: 0208 8767 7866
e-mail: editor@londonputhinam.co.uk.

ஒரு வருடத்துக்கு 'புதினம்' மாதமிருமுறை இலவச இதழைத் தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான £9.00 பவுண்களை மட்டும் EELAKESARI என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

மீண்டும் மணப் பந்தல்

மீண்டும் உங்களுக்காக 'மணப்பந்தல்' பகுதியை ஆரம்பிக்கிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற மணமகன் அல்லது மணமகளை எப்படித் தேடுவது என்ற பிரச்னைக்கு உதவுவதே எமது நோக்கம். சமீபத்தில் இங்கு வாழும் ஒரு பெண்மணி மிக நன்றியோடு, ''உங்கள் இதழில் நான் தந்த 'மணமகன் தேவை' விளம்பரத்தினால் கொழும்பில் வேலை செய்யும் என் தங்கைக்கு இங்கு வாழ்கிற நல்ல உத்தியோகத்திலுள்ள- பிரிட்டிஷ் பிரஜாவுரிமை பெற்ற ஒருவர் கிடைத்திருக்கிறார். அவர் கொழும்பு சென்று என் தங்கையைத் திருமணம் செய்து கூட்டிவரவுள்ளார்''என்று மகிழ்ச்சியுடன் தொலைபேசியில் சொன்னார். எங்களுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. இதனை நல்ல முறையில் ஏன் தொடர்ந்து செய்யக்கூடாது? என்று யோசித்தோம். இந்தப்பகுதிக்கென்று ஒருவரைப் பொறுப்பாக நியமித்து பணியை நல்ல முறையில் செய்வது என்று முடிவு செய்தோம். உங்கள் தகவல்கள் மிக ரகசியமாக வைத்துக் கொள்ளப்படும். சுட்டு இலக்கம் (REFERENCE NUMBER) மட்டுமே

(19ம் பக்கம் பார்க்க)

டாக்டர் ஸ்ரீதரனின் 'நிர்வாணம்' 'சிதம்பர சக்கரம்' இரு நூல்கள் மலிவு விலையில்!

தபால் செலவு உட்பட £5 பவுண்கள் மட்டுமே! Eelakesari என்ற பெயருக்கு காசோலை அல்லது போஸ்டர் ஓடராக அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: Puthinam, 38 Moffat Road, London SW17 7EZ



சமூகவியல் ஆராய்ச்சியில் உலகின் அதிசிறந்த பல்கலைக்கழகமான – அகில உலகப்புகழ் பெற்ற – The London School of Ecconmics and Political Science (LSE) இனால் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டவர் இந்த நூலின் ஆசிரியர் பாலகிருஷ்ணன் ஸ்ரீதரன். கடந்த பதினாறு ஆண்டுகளாக விரிவுரையாகராகக் கடமையாற்றும் இவரது இந்த 'நிர்வாணம்' நூலை புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரும் படித்து உண்மைகளை உணரவேண்டும் என்ற ஆவலில் இதனைப் 'புதினம்' வெளியிட்டிருக் கிறது.

– ஆசிரியர், புதினம்

பெற்றோரின் நிர்வாணத்தில் நிர்வாணமாகப் பிறந்து நிர்வாணத்தை ரகசியமாக ரசிக்கும் நாம், டாக்டர் ஸ்ரீதரன் காட்டும் நிர்வாணத்தைக் காணக் கூசுகிறோம். இங்கு ஆடை அணிந்து பலர் நிர்வாணமாக இருக்கிறார்கள். ஆடை இல்லாமல் அலங்காரமாகவும் சிலர் இருக்கிறார்கள். நிர்வாணம்தான் உண்மை. அதை மறுக்க முடியாது.

– அமரர் வித்துவான் க.ந. வேலன்

அற்புதமான கருத்துக்களை சொற்சித்திரமாகச் செதுக்கி, பொற்பதமாகப் புனைந்திருக்கிறார் ஆசிரியர். இவை தோரணங்கள் போலத் தொங்கத்தக்கவை. அகத்தின் அழுக்குகள் கழுவப்பட்டால் பிணியில்லை என்று கூறுவது, ஆண்டு பலவாக நரையில் வாடுதல் என்ற புறநூற்றுப் பாடலை நினைவில் கொண்டு வருகிறது. புலம் பெயர் நாட்டில் தமிழ் மக்களின் போலி வேடங்களை தொட்டுக் காட்டிப் பரம்பரை நோய்களின் வேர்களுக்கு மருந்துத் துளிகள் விடுகிறார் ஆசிரியர்.

– புலவர் மணி இளவாலை அமுது

'சிதம்பரம் சக்கரம்' பற்றி டாக்டர் ஸ்ரீதரன்

ஒரு கசாப்புக் கடைக்காரனுக்கு மாமிசமாகவும், வராட்டி விற்பவனுக்கு சாணியாகவும், செருப்புத் தைப்பவனுக்குத் தோலாகவும், சிவ பக்தனுக்கு கோமாதாவாகவும், கோவில் காளைக்கு யோனியாகவும், காட்சியளிக்கும் புல்வெளியில் மேயும் அந்தப் பசு இவர்களின் பார்வைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட – இவர்களின் பார்வைகளில் புரிந்து கொள்ள முடியாது ஒரு முழுமை.

பிறந்த இனம் – பேசும் மொழி – கற்ற கல்வி – வாழ நேர்ந்த சூழல் – புகுத்திய சமயம் – சொல்லக் கொடுத்த கலை – நம்பிய கலாச்சாரம் – இவை உருவாக்கிய நம் மனம் கொடுக்கும் தோற்றங்களே நாம் பார்க்கும் உலகம்.

நாம் அன்றாடம் பார்த்துப் பழகி – இதுதான் நிஜமென்று நம்பும் இந்த உலகத்தின் வேறொரு பரிமாணத்தை – முற்றிலும் வேறொரு தோற்றத்தை – உங்களுக்குக் காட்ட முயற்சித்திருக்கிறது இந்த சிதம்பர சக்கரம்...

இந்த இரு நூல்களும் லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தவறாது படிக்க வேண்டியவை.



ஸ்ரீ சிவசங்கர ஜோதிடம் ASTRO - PALMIST

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள **ஸ்ரீ முரளிதர சாஸ்திரி** அவர்கள்

உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைப்பார். கைரேகை, முகநாடி ஆகியவற்றைக் கொண்டும், குறிப்புப் பார்த்தும் உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விவகாரங் கள், தேகசுகம், எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா, பிரார்த்தனைகளும் கண் திருஸ்டி, தோசம் நிவர்த்தி செய்தும் தரப்படும்.

குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்
சனி	ராசி நிலை		சந்திரன்
சனி			சூரியன்
குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்

சாஸ்திரிகளை சந்திக்கும் இடம்

GANAPATHY CASH & CARRY (மேல் மாடி)
44 Ealing Road, Wembley
Middix HA0 4TL, Mobile: 07947 311 880

திறந்திருக்கும் நேரம்: காலை 9.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை

சட்டங்களை இறுக்கி தேசத்துக்குப் பாதுகாப்பு வேலி:

முகம் தேரியாத எதிரியை என்ன செய்யும்?

அலசுகிறார்: **தினேஷ்**

இரண்டு உலக மகா யுத்தங்களையும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு எதிரிகளுடனான சிறிய பெரிய யுத்தங்களையும் உலக நாடுகள் கண்டு வந்திருக்கின்றன. மரபு ரீதியான பாதுகாப்பு வியூகங்கள் கட்டமைப்புகளுடன் தம்மைப் பாதுகாக்க ஒவ்வொரு இறைமை மிக்க நாடும் தமக்கேற்ற ஒழுங்குகளை கொண்டிருந்தது. ஆனால் 2001ம் ஆண்டு செப்ரெம்பர் 11ம் திகதி நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர், உலகப் பாதுகாப்புச் சூழல் பல்வேறு மாற்றங்களுடன் புதியதோர் வரைமுறைக்குள் பிரவேசித்திருக்கின்றது. மரபுசாரா எதிரியையும் எதிர்நோக்கி பாதுகாப்புத் திட்டங்களை மாற்றி அமைக்கும் தேவை பெரும்பாலான நாடுகளுக்கு எழுந்திருக்கிறது. ஜூலை 7ம் திகதி லண்டன் குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு மரபுரீதியான பாதுகாப்பு கட்டமைப்புகள் காலச்சூழலுக்கு ஏற்ற புதிய உத்திகளைக் கொண்டதாக நிரந்தரமாகவே மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

எதிரியையும் போருக்கான இலக்கையும் திட்டவட்டமாக வரையறை செய்ய முடியாத நிலையில் இரண்டு பெரும் அடிப்படை வாதங்கள் கருத்தியல் வேறுபாடுகளை ஆயுதங்களைக் கொண்டு தீர்க்க முற்படுவதால் இந்த மூன்றாவது உலக யுத்தம் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவடையாது தொடர்ந்து நீடிக்கப் போகிறது என்பது யதார்த்தமான உண்மை.

விகாரமடையாத நடுநிலைப் போக்காளர்களினால் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாத, ஒன்றுக்கொன்று முரண்பட்ட இலட்சியங்களை இஸ்லாத்தின் பெயரால் செயற்படும் தீவிரவாதிகளும் நாகரீக உலகம் என்ற போர்வையில் பகட்டுக் காட்டும் ஆங்கிலோ அமெரிக்க அதிகார வர்க்கமும் அடைய முனைவது ஒருபோதும் உலகிற்கு விடிவை தரப்போவதில்லை.

கருணைக்கொலை போன்று மிக உன்னதமான ஒரு தவிர்க்க முடியாத நிர்ப்பந்துக்காக உருவான "புனிதப் போர்" என்ற எண்ணக்கருவை தமது குற்றங்களை மறைக்கும் வஸ்திரமாக பாவிக்க முனையும் சக்திகள் அப்பாவிகளை மனம் மாற்றி உலகில் பொதுஜனங்களை கொல்கின்றார்கள். நிராயுதபாணிகளைக் கொல்பவர்களை 'மாவீரர்கள்' என்று அழைத்து புனிதமதம் இஸ்லாத்தின் விழுமியங்களை கொச்சைப்படுத்துகின்றனர். தேசங்களுக்கு எதிராக போர் பிரகடன் செய்யும் இவர்கள் இறந்த அப்பாவிகளின் மரணத்திற்காக வருத்தம் கூடத் தெரிவிக்காமல் இணையத் தளங்கள் ஊடாக வீரப்பிரதாபம் செய்யும் நிலையை இன்றைய உலகம் காண்கின்றது.

ஆனால் இவர்களின் செயல்களுக்காக உலகின் 1.3 (B) பில்லியன் முஸ்லிம்கள் குற்றவாளிகளாகப் பார்க்கப்படுவதோ அல்லது பிரிட்டனின் 1.8 (M) மில்லியன் முஸ்லிம்கள் இனப்பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதோ ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஏனெனில் 'பயங்கரவாதம்' என்ற இன்றுவபரை முறையாக வரை விலக்கணம் செய்யப்படாத ஒரு வார்த்தையைக் காட்டி அரபு உலகத்தின் அனைத்துக் கோரிக்கைகள், உள்ளக்கிடக்கைகள், எதிர்பார்ப்புகள், தன்மானம் அனைத்தையும் மேலைத்தேயம் புறக்கணிக்க முற்படுகின்றது.

(16ம் பக்கம் பார்க்க)

குரு	செவ்	சுக்கி	புதன்
சனி	கிரக		சந்தி
சனி	நிலை		சூரியன்
குரு	செவ்	சுக்கி	புதன்

ஓம்ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சிவானந்தா சாஸ்திரி அவர்கள் கைரேகை, முகநாடி ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

* துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்
* கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
* கைரேகை – முகநாடி வசியப்பொருத்தம்
* திருமணயோகம்
* வாஸ்த்து சாஸ்திரம் – நாட்டில் விசா மற்றும் பிரச்சனைகள்
* தொழில் – வியாபார – லட்சுமீகரம் விடயமான வசியப்பொருத்தம்
* எதிரிகள், கண்திருஷ்டி – கோட் வழக்குகள் * வாகனப்பொருத்தம் – லட்சுமீகரம்
* பெண்பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாக பெற்றாருடன் நிலைத்திருத்தல்

I will read you past, present and future by palm reading and face reading about your health, business, marriage, Education, Job, abroad, Visa and any family problems.

AKILAN ENTERPRISES LTD
274 High Street North, Eastham London E12 6SA
Mobile: 07960 267 975
Opening Hours: 9.00 a.m. - 9.00 pm.

விம்பிள்டன் விநாயகர் தேர்வடம் பிடிப்போம்!

14.08.05 ஞாயிற்றுக்கிழமை விம்பிள்டன் பிள்ளையாரின் தேர்த் திருவிழா. அன்றைய தினம் காலை 10 மணிக்கு தேரில் விநாயகர் அமர்ந்து ஆலயத்தை சுற்றியுள்ள வீதிகளில் பவனி வருவார். பகல் 12 மணிக்கு ஆலயத்தை வந்தடைவார். 'பகை ஒழிந்து, நம் இனம் செழிக்க ஒன்றுபடுவோம்' அவ்உணர்வோடு விம்பிள்டன் விநாயகன் தேர் வடம் பிடிப்போம்!

'சாரீரம் இல்லாமல் சங்கீதமா – ராசம் சில்க் காணாமல் சம்சாரமா'

Rasam Gayatri Silks
ராசம் காயத்திரி சில்க்ஸ்

மங்கலப் பட்டாடைகளின் சேலைக்களஞ்சியம்
Rasam Gayatri Silks

Eastham இல், கூறைச்சேலையுடன் Kolam, Deepam, Mangalyam போன்ற பட்டாடைகளிற்குப் பெயர்போன Rasam Gayatri Silks

இப்போது TOOTING இல்
165 Upper Tooting Road, Tooting SW17
Tel: 020 8682 3958

Eastham இல்
312 High Street North, Eastham E6
Tel: 020 8552 6060

காண்டம் நாடி ஜோதிடம்

பி.ஜெய்சங்கர் பி.ராஜசேகர்

கடந்த 12 ஆண்டுகளாக இலங்கையில் காண்டம் வாசித்துப் புகழ் பெற்ற

P. ஜெய்சங்கர்- P. ராஜசேகர்

இப்போது லண்டன் கிங்ஸ்பெரியில்

ஸ்ரீ கௌசிக அகத்திய முனிவர்களால் ஓலைச் சுவடிகள் மூலம் எழுதப்பட்ட ஓலையிலிருந்து

உங்களுடைய நிகழ்காலம்- எதிர்காலம்

பற்றிய பலன்கள் அறிய தொடர்பு கொள்ளுங்கள்.

656 KENTON ROAD, KINGSBURY HA3 9QN

Tel: 020 8905 0450 Mob: 0796 0708 245

RADIUS SERVICES LIMITED

For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning Equipments

உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்

020 8692 0257 / 020 8694 2786

UNIT: 23-24 RESOLUTION WAY, LONDON SE8 4NT

SALES - SERVICE - REPAIRS

விலங்கிடப்பட்டிருக்கும் அரசியல் அதிகாரம்

இலங்கையில் புத்தமத ஆதிக்கத்தினால் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு இல்லை!

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் தீர்க்கமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள சிங்கள அரசியல் தலைமைகள் துணிவும் விவேகமும் அற்றவர்களாகக் காணப்படுகின்ற போக்கும், மீண்டும் ஒரு போரினைத் தொடங்கி தமிழ் மக்களை அழித்து விடுவதற்கான அபாயகரமான திட்டங்களும் தீட்டப்படுகின்றன.

தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவையாக சர்வதேச சமூகம் நோக்கும் அதேவேளை சில சக்திகள் போரை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் சுயலாபமடைவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றன. இவ்வாறான சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்ட அரசு தமிழ் மக்களது பிரச்சினை குறித்து பாராமுகமாகவே இருந்து வருகின்றனர்.

இப்போது சிறிலங்காவின் ஆட்சி சுத்தமான ஜனநாய ஆட்சி என்று கூறி விட முடியாது. அதற்கான இலட்சணங்களை அடையாளப்படுத்தக் கூடிய வகையில் அரசியல் நகர்வுகள் எவையும் மேற்கொள்ளவில்லை.

குறிப்பிட்ட பெரும்பான்மை இன மக்களது சேவை நலனை திருப்திப்படுத்தும் அரசியல் கொள்கையும், செயற்பாடுகளுமே மேற்கொள்ளப்படுகின்றன. அதனைவிட மதம் அரசியலை ஆட்டிப்படைக்கும் சக்தியாக பரிணமித்து நிற்கின்றது. மத வெறித்தனம் காலூன்றப்படுமாயின் தளம் பலமற்ற அரசியல் எனக் குறிப்பிடப்பட முடியாது. புத்த மத ஆதிக்கம் முழு அளவில் சிங்கள அரசியலை விட மிஞ்சிய சக்தியாக பரிணமித்து நிற்கின்றது.

அது ஏனைய இன மதங்களைப் பின்பற்றுவோரை புறக்கணிக்கும் அல்லது அழித்து விடும் தன்மையை கொள்கையாகக் கைக்கொள்ளாது அரசியல் நகர்வுகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தாலும் பரவாயில்லை என்று கூறலாம். ஆனால் சிறிலங்காவில் அவ்வாறானதொரு நிலையில்லை. மத ஆதிக்கம் வேரூன்றியிருப்பதுடன் தமிழ் மக்களைப் புறக்கணிக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. அன்னிய ஏகாதிபத்திய சக்திகள் இலங்கைத் தீவினை ஆக்கிரமித்திருந்த போது தமிழர் தாயகத்தில் தமிழினத்தின் மத வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டன.

இன்றும் அவ்வாறான நிலையை உருவாக்குவதற்குக் காரணம். தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக சிங்கள தேசம் அழிப்பதற்கான கபடச் சூழ்ச்சி தான் அது. ஏனெனில் ஒரு கட்சி தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படும் போது மற்றைய கட்சி அதனை வைத்து அனுதாபிகளாக அரசியல் இலாபமீட்டிக் கொள்வார்கள். பின்னர் அனுதாபிகளாக நடித்த அரசியல் கட்சி, தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் போது ஏற்கனவே எதிராகச் செயற்பட்ட கட்சி அனுதாபத்தைத் தேடிக் கொள்ளும். இவ்வாறு தான் இதுவரை சிறிலங்கா அரசியல் கலாசாரம் இருந்து வந்தது.

இந்த நிலையை மாற்றி ஒட்டுமொத்த சிங்கள இனமும் தமிழ் மக்கள் மீது வெறுப்புணர்வையும், ஆத்திரத்தையூட்டுவதாயின் மத வெறியை பிரதான ஆயுதமாகக் கொள்ள வேண்டும் எனக் கருதியுள்ளனர். அதனையே இப்போது சிங்களப் பேரினவாதம் முழு அளவில் கையாண்டு வருகின்றது.

திருமலையில் புத்தர் சிலை, ஒமந்தையில் புத்தர் சிலை, பொத்துவிலில் புத்தர் சிலை, இவ்வாறு தமிழர் தாயகத்தின் மூலை முடுக்கெல்லாம் புத்தர் சிலைகளை விதைக்கும்போது அதற்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவார்கள். சிலைகளை அகற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டால் அது சிங்கள சமூகத்திடையே சின மூட்டலை ஏற்படுத்தும்.

அத்தருணம் பார்த்து இனவாதத்தை தூவி விடுவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக தென்னிலங்கை மக்கள் கொண்டிருந்த சிறியளவிலான அபிப்பிராயம் கூட கரைந்து விடும்.

இந்த நடைமுறைதான் இப்போது கையாளப்பட்டிருக்கின்றது அரசியல் தலைமைகளை விட மதபீடங்களின் மகா நாயக்கர்களின் சொற்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் மண்டியிட்டு அவர்களது ஆலோசனைப்படி செயற்படுவதற்கான நிலையே காணப்படுகின்றன. இதனை எவ்வாறு ஜனநாயகம் என்பது?

பல்லினம் வாழும் நாடு ஐக்கிய இலங்கைக்குள் சமரசத் தீர்வு காண்பது தான் நோக்கம் என மேடைகளில் முழங்கும் சிங்கள அரசியல்வாதிகள், புத்த மத மேலாதிக்கத்தை அரசியல் அதிகாரத்திற்கு மேலாக ஆதிக்கம் செலுத்தும் சக்தியாகப் பயன்படுத்துவது சிறுபான்மையினருக்கு ஆபத்தான விடயமல்லவா?

எதிர்காலத்தில் சிங்கள அரசியல் இந்த மத அடிப்படை வாதத்திலிருந்து விடுபடும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. மேலும் மேலும் மத ஆதிக்கம் அதிகரிப்பதுடன் காவி உடைதாரிகள் நாடாளுமன்ற ஆசனங்களை அதிகமாக நிரப்புவார்கள் என்று கூடக் கூறிவிடலாம். இவ்வாறான நிலைமையே நாம் முழுமையாக நோக்குமிடத்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கு சிங்கள அரசியல் தலைமைகள் ஒரு போதும் விட்டுக் கொடுப்போடு செயற்பட மாட்டார்கள். காரணம், அவர்களது அரசியல் அதிகாரம் புத்த மத ஆதிக்கத்தினால் விலங்கிடப்பட்டிருக்கின்றது என்பதே உண்மை.!

சென்னையில் காணி விற்பனைக்கு

தமிழ்நாடு, சென்னை முட்டுக்காடு (Muddukkadu) E.C. Road இல், M.G.M. Disney Worldக்கு அருகில், கடற்கரைப் பக்கமாக (முக்கால் மைல் இடைவெளி) மிகச் சிறந்த நந் நீர் வசதியுடன் கூடிய வீடு (மேலே சில மாடிகள் கட்டக்கூடியதாக) விற்பனைக்கு உண்டு. விசாலமான இடவசதி உள்ளது. மேலும் விபரங்களுக்கு - ராஜ்குமார் - 020 8480 2122

சின்னஞ் சிறுகதை

சுனாமி

மன்னார்குடி விசுவநாதன்

அது ஒரு கடற்கரை.

சுனாமி கடல்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு மாண்டு போனோரில் எஞ்சியவர்கள் அகதிகளாய், கண்ணீரும் கம்பலையுமாக ஆங்காங்கே மணல் திட்டுக்களில் பதைப்போடு உட்கார்ந்திருந்தார்கள்.

கணவனை இழந்த விதவைகள், மனைவியை இழந்த கணவன்மார், ஈன்றெடுத்த பிள்ளைகளைப் பறிகொடுத்து பெற்றோர், பெற்றோரைப் பறிகொடுத்துவிட்டுத் திக்குத் திசை அறியாமல் கதறித் துடிக்கும் குழந்தைகள்...

சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாகித் துடித்துக்கொண்டிருந்த அந்தக் கூட்டத்தினர் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த உணவுப் பண்டங்கள் நிரப்பிய வேன் ஒன்று வேகமாக அங்கே வந்து நின்றது.

தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் ஆகியோர் அங்கு வந்து கூட்டம் கூட்டமாக உட்கார்ந்திருந்தவர்களை அமைதியாக, வரிசையாக நிற்கும்படி செய்தனர். அரச அதிபர் வந்தார். அதிகாரிகளும் உடன் வந்தனர்.

உணவு வகைகள் அடங்கிய பொட்டலம் ஒன்றை வரிசையில் நிற்பவர்களுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டே போனார்கள்.

பொட்டலம் வாங்கியவர்கள் அனைவரும் கலைந்து மீண்டும் திட்டுத் திட்டாக உட்கார்ந்து பொட்டலத்தைப் பிரித்துத் தின்னத் தொடங்கினார்கள்.

அரச அதிபர் சாப்பிடுவதையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்தார்.

ஓரிடத்தில் இரண்டு சிறுபிள்ளைகள் உட்கார்ந்திருக்க, பொட்டலங்களைப் பிரித்து ஆவலோடு தின்று கொண்டிருந்தாள் அந்தத்தாய்.

குழந்தைகள் பாவம்...

தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

சாப்பிட்டு முடித்து தண்ணீரைக் குடித்துவிட்டு சேலை முந்தானையில் கைகளைத் துடைத்தவாறு எழுந்தவள் விறுவிறுவென்று வேறு திசையில் நடக்கத் துவங்கினாள்.

(15 ம் பக்கம் பார்க்க)

RATNA & COMPANY SOLICITORS
(London)

❒ Immigration and Nationlity Law ❒ Work Permit applications ❒ Highly skilled migrant programme ❒ Tourist visa application and extensions ❒ Student visa applications and extensions ❒ Permanent resident applications if you have lived in the UK for 7/10/14 years ❒ Asylum applications and appeals ❒ Human Rights applications ❒ Bail and detention matters ❒ European citizens applications ❒ Sponsorship Declarations ❒ Family Reunion applications ❒ Houses, Flats and Business buying, selling and re-mortgaging ❒ Traffic offences ❒ Cases before Magistrates Court and County Court ❒ Drafting Will ❒ Drafting Power of Attorney ❒ We are authorised by the Legal services Commission to provide free legal advice

Legal Aid

We are also able to assess your knowledge in English language for Nationality applications

Contract:
Mr. M or Mrs. K. Ratnapalan 169, High Street North, East Ham, London E6 1JB

Tel: 020-8470 8818, Fax: 020-8475 0131

Mobile: 07906 862 292 (Mr. Ratna), 07769 748409 (Mrs. Ratna)

email: k_ratna@ratna.co.uk or mratnapalan@hotmail.com web: www.ratna.co.uk

16.08.2005 முதல் 31.08.2005 வரை நிகழ்ச்சி நிரல்

தீபம்

உங்கள் 'தீபம்' தொலைக் காட்சி வழங்கும்
கோடைக் கால விசேட சலுகை
ஒரு வருட தீபம் சந்தாவுடன் தீபம் இணைப்பைப் பெற
இப்போது £199 மட்டுமே!
Dish மற்றும் பொருத்தும் செலவுகள் முற்றிலும் இலவசம்!!
நீங்களும் தீபம் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ...
உடனே அழையுங்கள்
020 8814 6565

நிகழ்ச்சிகளில் மாற்றங்கள் ஏற்படலாம்

செவ்வாய் 16.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 அன்புள்ள சினேகிதியே
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
16.00 துருவ நட்சத்திரம்
16.30 பந்தம்
17.00 வீணை இசை
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 எதிரொலி
21.00 பைரவி
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

புதன் 17.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 பழமை தந்த இனிமை
10.00 நகைச் சுவைநேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 ராக மாலிகா
16.30 பந்தம்
17.00 குவா குவா வாத்து
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 யார்?
21.30 இல்லறமே நல்லறம்
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

வியாழன் 18.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 அன்புள்ள சினேகிதியே
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 டொப்10 மூவி
16.00 தக திமிதா
16.30 பந்தம்
17.00 இசைக் கச்சேரி
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலைமாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 பதிவுகள்
21.00 உருத்திர வீணை
21.30 திரை மசாலா
22.00 நகைச் சுவை நேரம்
22.30 மறு ஒளிபரப்பு

வெள்ளி 19.08.2005
7.00 காலைக் கதிர்
9.30 சங்கீதக் காலை
10.00நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 டொப் 10 பாடல்கள்
16.00 இசை நிகழ்ச்சி
16.30 பந்தம்
17.00 பரத நாட்டியம்
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 சிவனருட் செல்வர்
19.00 ஞானதீபம்
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 திரை விருந்து
22.30 மறு ஒளிபரப்பு

சனி 20.08.2005
7.00 இசைத் தென்றல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 தேனமுது
8.30 பிள்ளைத் தமிழ்
8.45 சூப்பர் மென்
9.15 குட்டீஸ் கிளப்
10.30 செல்வி -சின்னத் திரைத் தொடர் மறு ஒளிபரப்பு
12.00 சலனம்- மறுஒளிபரப்பு
13.00 அன்புள்ள சினேகிதியே
13.30 திரை விருந்து
16.00 திரை வலம்
16.30 குவா குவா வாத்து
17.00புதுமைப் பெண்கள்
17.30 ருக்கு ருக்கு ருக்குமணி
18.00 இதய சங்கமம்
18.30 நகைச்சுவை நடிகர் சந்திப்பு
19.00 இதுஎப்படி இருக்கு?
19.30 செய்திகள்
20.00 திரை விருந்து-
22.30 மறு ஒளிபரப்பு

ஞாயிறு 21.08.2005
7.00 ஒரு படப்பாடல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 நெஞ்சில் நின்ற ராகம்
8.45 ஆங்கிலம் கற்போம்
9.15 இராசி பலன்
9.30 பதிவுகள்
10.30 ஆலோசனை நேரம்
11.00 சிரிப்பலைகள்
11.30 புதுப் பாடல்
12.00 நில் கவனி கிரேஸி
12.30 அரங்கம் அந்தரங்கம்
13.00 திரை விருந்து
15.30அன்புள்ள சினேகிதியே
16.00 திரை அலசல்
16.30 தகதிமி தா
17.00 சூப்பர் ஜோடி
17.30 ராக மாளிகா
18.30 ஸ்டாருடன் ஒருநாள்
19.00 சின்னப் பாப்பா பெரிய பாப்பா
19.30 செய்திகள்
20.00 திரை விருந்து
22.30 மறு ஒளிபரப்பு

திங்கள் 22.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவைநேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 தமிழ் சினிமா வரலாறு
16.30 பந்தம்
17.00 சூப்பர் மென்
17.30மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30கானக் குயில்2005
21.00 சலனம்
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

செவ்வாய் 23.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 அன்புள்ள சினேகிதியே
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
16.00 துருவ நட்சத்திரம்
16.30 பந்தம்
17.00 சூப்பர் மென்
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 எதிரொலி
21.00 பைரவி
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

புதன் 24.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 பழமை தந்த இனிமை
10.00 நகைச் சுவைநேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 ராக மாலிகா
16.30 பந்தம்
17.00 குவா குவா வாத்து
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 யார்?
21.30 இல்லறமே நல்லறம்
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

வியாழன் 25.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 அன்புள்ள சினேகிதியே
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 டொப்10 மூவி
16.00 தக திமிதா
16.30 பந்தம்
17.00 இசைக் கச்சேரி
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலைமாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 பதிவுகள்
21.00 உருத்திர வீணை
21.30 திரை மசாலா
22.00 நகைச் சுவை நேரம்
22.30 மறு ஒளிபரப்பு

வெள்ளி 26.08.2005
7.00 காலைக் கதிர்
9.30 சங்கீதக் காலை
10.00நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 டொப் 10 பாடல்கள்
16.00 இசை நிகழ்ச்சி
16.30 பந்தம்
17.00 பரத நாட்டியம்
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 சிவனருட் செல்வர்
19.00 ஞானதீபம்
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 திரை விருந்து
22.30 மறு ஒளிபரப்பு

சனி 27.08.2005
7.00 இசைத் தென்றல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 தேனமுது
8.30 பிள்ளைத் தமிழ்
8.45 சூப்பர் மென்
9.15 குட்டீஸ் கிளப்
10.30 செல்வி -சின்னத் திரைத் தொடர் மறு ஒளிபரப்பு
12.00 சலனம்- மறுஒளிபரப்பு
13.00 அன்புள்ள சினேகிதியே
13.30 திரை விருந்து
16.00 திரை வலம்
16.30 குவா குவா வாத்து
17.00புதுமைப் பெண்கள்
17.30 ருக்கு ருக்கு ருக்குமணி
18.00 இதய சங்கமம்
18.30 நகைச்சுவை நடிகர் சந்திப்பு
19.00 இதுஎப்படி இருக்கு?
19.30 செய்திகள்
20.00 திரை விருந்து-
22.30 மறு ஒளிபரப்பு

ஞாயிறு 28.08.2005
7.00 ஒரு படப்பாடல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 நெஞ்சில் நின்ற ராகம்
8.45 ஆங்கிலம் கற்போம்
9.15 இராசி பலன்
9.30 பதிவுகள்
10.30 ஆலோசனை நேரம்
11.00 சிரிப்பலைகள்
11.30 புதுப் பாடல்
12.00 நில் கவனி கிரேஸி
12.30 அரங்கம் அந்தரங்கம்
13.00 திரை விருந்து
15.30அன்புள்ள சினேகிதியே
16.00 திரை அலசல்
16.30 தகதிமி தா
17.00 சூப்பர் ஜோடி
17.30 ராக மாளிகா
18.30 ஸ்டாருடன் ஒருநாள்
19.00 சின்னப் பாப்பா பெரிய பாப்பா
19.30 செய்திகள்
20.00 திரை விருந்து
22.30 மறு ஒளிபரப்பு

திங்கள் 29.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவைநேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 தமிழ் சினிமா வரலாறு
16.30 பந்தம்
17.00 சூப்பர் மென்
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 கானக் குயில்-2005
21.00 சலனம்
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

செவ்வாய் 30.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 தேனமுது
10.00 நகைச் சுவை நேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 அன்புள்ள சினேகிதியே
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
16.00 துருவ நட்சத்திரம்
16.30 பந்தம்
17.00 சூப்பர் மென்
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 எதிரொலி
21.00 பைரவி
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

புதன் 31.08.2005
7.00 காலைக் கதிர் நேரடி ஒளிபரப்பு
9.30 பழமை தந்த இனிமை
10.00 நகைச் சுவைநேரம்
10.30 சூப்பர் ஜோடி
11.00 பெண்ணே பெண்ணே
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும்
12.00 செய்தி
12.10 மறுபக்கம்
12.30 மறுபடியும் அவள்
13.00 திரை விருந்து
15.30 ராக மாலிகா
16.30 பந்தம்
17.00 குவா குவா வாத்து
17.30 மாமி டொட் கொம்
18.00 செய்தி
18.10 கீதாஞ்சலி
18.30 இரத்தினக் கலை மாலை
19.00 கல்கி
19.30 செல்வி
20.00 செய்தி
20.30 யார்?
21.30 இல்லறமே நல்லறம்
22.00 திரை மசாலா
22.30 மறு ஒளிபரப்பு

16.08.2005 முதல் 31.08.2005 வரை

உங்கள் ராசிக்கு எப்படி?

துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்
(சாரதா பீடம் ஜோதிடம் Tel: 07803 243 715)

மேஷம்

மேஷராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான யோகமான நற்பலா பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் கிடைக்கும். தொழில் ரீதியில் முன்னேற்றகரமான பலாபலன்கள் அமைய இடமுண்டு. குடும்பத்தில் நல்ல மகிழ்ச்சியும் சுபகாரிய அனு கூலங்களும் அமையும். பணவரவு நல்ல திருப்திகரமானதாக இருக்கும். புதிய பதவிகள் அமையும். சொத் துக்கள் சேரக்கூடிய அனுகூலங்கள் உண்டு. பதவி உயர்வுகள் ஏற்படக் கூடிய நிலையும் உண்டு. கடன் பிரச்சனைகள் சுமூகமான நிலை தரும். மாணவர்களின் கல்வி நிலை யில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். 18ம் 23ம் 28ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் உண்டு.

ரிஷபம்

ரிஷபராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சற்று நிதானமாக செயற்பாடு வேண்டும். தொழில் ரீதியில் சற்று அலைச்சல் இழுபறி நிலைகள் ஏற்படும். உடல் ரீதியிலும் சிறுசிறு சுகயீனங்கள் மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும். தாயார் வழியில் செலவு கள் அமைய இடமுண்டு. கொடுக் கல் வாங்கல் விடயங்களில் நிதானம் தேவை. கடன் பிரச்சனைகள் சற்று அலைச்சல் இழுபறி நிலையை கொடுக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் உண்டு. 19ம் 24ம் 27ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் அமையும்.

மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான சுமாரான பலாபலன் களே அமையும். எடுக்கும் முயற்சி களில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் ரீதியில் சிறுசிறு மந்த நிலைகள் தோன்றி மறையும். எடுக்கும் காரியங்களில் நிதானமான செயல் பெரும்பாலும் இருப்பது நல்லது. கடன் பிரச்சனைகளில் சற்று இழுபறி நிலைகள் இருக்கும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் நிதானமான செயற்பாடு வேண்டும். பணவரவு சற்று மத்திமமானதாகவே அமையக் கூடிய நிலைப்பாடுகள் உண்டு. மாணவர்களின் கல்வி நிலையில் நிதானமான செயல் வேண்டும். 19ம் 23ம் 28ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் உண்டு.

கடகம்

கடகராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் ரீதியில் முன் னேற்றகரமான பலாபலன்களுக்கு இடமுண்டு. எடுக்கின்ற முயற்சி களில் நல்ல வெற்றிகளுக்கு இட முண்டு. பணவரவு மிகவும் சிறப்பான தாக அமையும் நிலை உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபகாரிய அனுகூலங்களும் அமையும். கொடுக் கல் வாங்கல் விடயங்களில் சுமூக மான நிலைகள் இருக்கும். கடன் பிரச்சனைகளில் ஓரளவிற்கு அனு கூலம் உண்டு. மாணவர்களின் கல்வி நிலையில் முன்னேற்றகரமான நிலை கள் உண்டு. 20ம் 23ம் 25ம் திகதிகளில் அனுகூலமான பலன் அமையும்.

சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறுசிறு இழுபறி தாமத நிலைகள் இருக்கும். தொழில் ரீதியில் சற்று அலைச்சல் வேலைப்பளு என்பன அமையும். தேவையற்ற வீண் பிரச் சனைகள் உங்களை சூழ இடமுண்டு. எந்தவிடயமாக இருப்பினும் நிதான மாக செயல்படவேண்டும். கடன் பிரச்சனைகள் இழுபறி தாமத நிலைகள் தரும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் மிகவும் நிதானம் தேவை. மாணவர்களின் கல்வி நிலையில் சற்றுக் கவனம் வேண்டும். 19ம் 23ம் 28ம் திகதிகளில் அனுகூல மான பலன்கள் அமையும்.

கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சற்று தடங்கல் நிலைகளின் பின் வெற்றிகள் அமையும். தொழில் ரீதியில் சிறுசிறு அலைச்சல் வேலைப்பளு என்பன இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதான மான செயற்பாடு வேண்டும். கடன் பிரச்சனைகள் ஓரளவிற்கு சுமூக மான நிலைப்பாடு கொடுக்கும். சொத்துக்கள் சேரக்கூடிய பலன் களுக்கு இடமுண்டு. திடீர் அதிஷ் டங்கள் அமைய பலனுண்டு. மாண வர்களின் கல்வி நிலையில் சற்று கவனம் வேண்டும். 19ம் 23ம் 27ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் உண்டு.

துலாம்

துலாராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான நற்பலா பலன்கள் அமைய இடமுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் அமையும். தொழில் ரீதியில் முன்னேற்றகர மான பலாபலன்கள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான தாக அமைய பலன் உண்டு. எதிர் பாராத வகையில் அதிஷ்டங்கள் ஏற்பட பலன்கள் உண்டு. குடும்பத் தில் நல்ல மகிழ்வும் சுபகாரிய நிலை களும் அமையும். கடன் பிரச்சனை கள் ஓரளவிற்கு சுமூகமானதாக இருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் முன்னேற்றகரமான நிலை உண்டு. 18ம் 23ம் 28ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் அமையும்.

விருச்சிகம்

விருச்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் ரீதியில் முன் னேற்றங்களுக்கு இடமுண்டு. வேலைப்பளு, அலைச்சல், இடமாற் றம், திடீர் பிரயாணங்கள் போன்ற பலாபலன்கள் அமைய இடமுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் சிறுசிறு இழுபறி தாமத நிலைகள் இருக்கும். கடன் பிரச்சனைகளில் சற்று அலைச்சல் நிலைகள் இருக்கும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும். மாணவர்களின் கல்வி நிலையில் ஓரளவிற்கு அனுகூலம் உண்டு. 18ம் 23ம் 27ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் உண்டு.

தனுசு

தனுசுராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான யோகமான நற்பலாபலன் கள் அமையும். எடுக்கும் முயற்சி களில் நல்ல வெற்றிகள் உண்டு. தொழில் ரீதியில் முன்னேற்றகர மான நிலைகள் உண்டு. திடீர் அதிஷ்டங்கள், லாட்டரி அதிஷ்டம் என்பன அமைய இடமுண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும் நிலையுண்டு. கடன் பிரச்சனைகளில் ஓரளவிற்கு அனு கூலமான பலன்கள் அமையும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் சுமூகமான நிலைகள் இருக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். 21ம் 23ம் 30ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் உண்டு.

மகரம்

மகரராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான சுமாரான பலன்களே

(16ம் பக்கம் பார்க்க)

HURRY – STILL FEW DISCOUNTED SEATS AVAILABLE

: : Destinations : :

	From
Kuala Lumpur	£360
Singapore	£360
Accra	£380
Lagos	£460
Johannesburg	£365
Melbourne	£525
Perth	£525
Sydney	£605
Brisbane	£475
Colombo	£350
Madras	£415
Trivandrum	£415
Toronto	£199
New York	£325
Dubai	£229
Billund	£59
Oslo	£59
Zurich	£39
Jaffna	£400

Prices shown exclude taxes

SPECIAL OFFERS!

நவம்பர் 30 வரை

COLOMBO
CHENNAI

50% OFF 3rd Person
Between 2 - 18 Years (Same family)

லண்டன் வாழ் நம்பிள்ளைகள் எம் உறவுகளைக் கண்டு மகிழ்வதற்கும் நல்லூர்க்குமரனைத் தரிசிப்பதற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் விடுமுறை நேரத்தில் – 1st July - 31st Aug 05 வரை குறைந்த விலையில்

Family Ticket

: : Info : :

Opening Times:
Mon - Fri 09:30-20:00
Sat 09:30-18:00
Sun 10:00-18:00

Contact Us:
Tele: 020 8672 5551
020 8672 2010
Fax: 020 8682 1964

Directions:
Left from Tooting Broadway station or right from Colliers Wood station.
Near the Mercedes-Benz showroom and opposite the Trafalgar Arms pub.

Specialists in Sri Lankan travel 171 Tooting High Street, Tooting, London SW17 0SZ

காதல் என்றால் முளைக்க முன்பே கருவிலே கசக்கின பயங்கரம்
50 ஆண்டுக்கு முன் குமரியாக இருந்தபோது பட்ட துயரங்கள்..

இளவயது ஏக்கங்களைப் பதிர்கிறார்
தாயடிக் கனகம்மா

பல நாட்களுக்குப் பின் அத்தி பூத்தாற் போல் 'நிர்வாணம்' ஆசிரியரின் கட்டுரை மீண்டும் 'புதினம்' இதழில் வாசித்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது. முன்பு பத்திரிகை கையில் கிடைத்தவுடன் என்னையறியாமல் கை பக்கங்களைப் பின்னோக்கி நகர்த்த, கண் "நிர்வாணம்" என்ற கட்டுரையத் தான் தேடும்! அந்த அளவுக்கு எனக்கு ஒரு மோகம்.

எட, நான் மோகம் என்றவுடன் ஏதோ ஆசிரியரும் நானும் கை கோர்த்து "பத்துக்குள்ளே நம்பர் ஒன்று சொல்லு. சொல்லு" என்ற சினிமாப்பாட்டுக்கு 'டுயட்' ஆடுகின்ற மாதிரி உங்கள் கற்பனைக் குதிரையத் தட்டிவிட்டு நீங்கள் பகல் கனவு காண ஆரம்பித்தால், அதற்கு நான் பொறுப்பில்லைப் பாருங்கோ! அவருடைய எழுத்தை நான் காதலிக்கின்றேன். அவற்றை வாசிக்கும் பொழுது எனக்குள் இருந்து ஒரு குட்டி மனிதன் அவர் என்னுடைய விடை கூறமுடியாத கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்கிறார் என்று சுட்டிக்காட்டுவது போலுள்ளது:

காதல்! காதல்! காதல்! எத்தனை பெரிய விடயம். இந்த மூன்றெழுத்தில் அடங்கியுள்ளது. இதை அலச வெளிப்பட எத்தனையோ ஜீவன்கள் அதில் மூழ்கி மூச்சுத் திணறியுள்ளார்கள். நல்ல விடயமா? கெட்ட விடயமா? என்பது எனது மனதில் இன்றும் பதிலில்லாத கேள்வி. புத்தகத்தில் இனிப்பது நடைமுறையில் கசக்குமா? காயா? பழமா? பேரக்குழந்தைகளையும் கண்ட எனக்கு இதற்குப் பதில் தெரியவில்லை! சினிமாவில் அன்று தொடங்கி இன்று வரை, விதம் விதமாகச் சித்தரிக்கப்பட்டு, பல படங்கள் வெற்றி பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அப்படியென்றால் காதல் என்பது வாழ்க்கைப் பாதையில் அனுபவமா? அப்போது எதற்காக பெரியவர்கள் அதை சரியோ பிழையோ என்று ஆராயாமல் உடனே மறுத்துவிடுகிறார்கள்? பிள்ளைகளென்றால் உயிரைத்தவிர எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் தாய் தந்தையர்கள், அதையும்விட மக்கள் பிற்காலம் நல்லாக இருக்க வேண்டுமென்று நினைக்கும் எமது கடவுளான பெற்றார்கள் காதல் என்ற வார்த்தை கேட்டால் இடியேறுண்ட நாகம் போல சீறுவதை நான் இளமைப் பருவத்தில் கண்கூடாகக் கண்டதுண்டு.

> "கிருஷ்ணன் குறும்பு செய்தால் லீலை; நாங்கள் செய்தால் பொறுக்கி! முருகன் கோவில் பூங்காவனமென்றால், வள்ளியைக் கிளப்ப முருகன் பூந்தோடத்துக்குள் புகுந்தால், அரோஹரா! ஆனால், நாங்கள் விரும்பி போனால், 'கிளப்பி விட்டான்' 'ஓடிவிட்டாள்' என்ற வசை..."

சுமார் ஐம்பது, அறுபது வருடங்கள் முன்பு நாங்கள் குமரிகளாக இருந்த காலங்களில் காதலென்றால் ஏதோ வேப்பெண்ணை குடித்த மாதிரித்தான் எமது பெற்றோர்கள் காதலை வெறுத்தார்கள். என்ன காரணத்துக்காக அது எமது கலாச்சாரத்தில் இலகுவாக அங்கீகரிக்கப் படவில்லை! சங்க காலங்களில் போரும் காதலும் பிரசித்தியாகத் தானே இருந்தது! காதலின் மறுபக்கம் மிகவும் துன்பம் சேர்ந்ததா? ஏன்தான் அது ஒரு நெருப்பு மாதிரி எனது சகவயதுப் பெண்களால் நினைத்துப் பார்க்கவே பயங்கரவிடயமாக எமது வீடுகளில் மறைமுகமாகப் போதிக்கப்பட்டிருந்தது என்பது இன்றும் எனக்கு கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. காதலென்றால் அது உண்மையான காதலா? அல்லது நாம் தேடும் வரனைவிட, பெண்ணுக்கு அவளுடைய காதலன்தான் பொருந்துமா என்று கூடப்பார்க்காமல் காதல் என்றவுடன் உடனே "மறுத்தான் கிட்டி" போல அதாவது பொல்லு விழமுன் கிட்டி விசுறுவது போல பெற்றார்கள் உடனே மறுத்தது பல இடங்களில் அவதானித்துள்ளேன். ஆனால் இன்று அந்த எதிர்ப்பு இல்லை. இன்றும் எனது மனதில் வாழும் அன்புத் தோழியை நினைத்துப் பார்க்கிறேன். அவள் மிக அழகானவள். எனது அப்புவே நல்ல "விறுத்தமான பெட்டை" என்று சொல்வதுண்டு. அவள் ஒரு நாள் அதே ஊரைச் சேர்ந்த பையன் கொடுத்த காதல் கடிதத்தைக் கை நீட்டி வாங்கிவிட்டாள். திருட்டுத் தனமாக நாங்களும் வாசித்தோம். "அலைகடல் வற்றினாலும் அன்புக் கடல் வற்றாத காதலிக்கு" என்ற தொடக்கம் இன்றும் ஞாபகமுள்ளது. கடிதம் வாங்கியதை அறிந்த அவளுடைய தாய் அன்று வீட்டில் ஒரே ஒப்பாரிதான், மரண வீடென்றால் மிகையாது. "எங்கள் குடும்ப மானத்தை வித்துப்போட்டியே! கஞ்சியோ கூழோ குடித்தாலும் மரியாதையாய் இருந்தனாங்கள். மற்றப் பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடம் போய் வரவில்லையே! உனக்கேனடி உன்ரை புத்தி குறுக்காலை போனது? சந்ததிக்கு இல்லாத வடுவைக்க வெளிக்கிட்டியே! நான் எப்படி அயலட்டையை முழிக்கிறது? எங்கையாவது குளம் குட்டையில் விழுந்து செத்துத் துலையறன்" என்ற அவளின் அம்மாவின் புலம்பல் சுற்றி நின்ற தோழிகளான எங்களுக்கெல்லாம் எங்களின் மனதிலுள்ள காதல் துளிருக்கு சங்கு ஊதின மாதிரியும் காதலென்றால் ஏதோ 'நாக பாம்புடன்' விளையாடுவது போல உணர்வையும் ஊட்டினதென்று தான் சொல்லமுடிகின்றது. காதலிப்பது குற்றமா? என்ற அந்த நேரத்துள் எனக்குள் உருவான கேள்வி மனதிலேயே சமாதியாகிவிட்டது.

> விரும்பினவனுடன் ஒரு பெண் சென்றால், 'ஓடிப்போனவள்', 'எடுபட்டு வந்தவள்', 'கிளப்பிக் கொண்டு வந்தவன்' 'ஏன் அவன் சித்தப்பனும் அப்படித்தானே' என்று அந்தக்காலத்தில் எத்தனை வார்த்தைகள்.....
>
> வகுப்பில் ஆசிரியர் படிப்பிக்கும் பொழுது, 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்று பாடம் எடுத்தார். அப்படி அந்த நாட்களில் நாங்கள் அதை நடைமுறைப்படுத்தியிருந்தால்... கண்ணுக்குள் மிளகாய்த் தூள் தூவியிருப்பார்கள்.....

சகோதரர்களுக்காக காதலை துறந்தவருமுண்டு. குடும்பத்துக்காகக் காதலையும், சாதிக்காகக் காதலையும், ஏன் காதலிக்காகக் காதலையும் துறந்தவர்களும் உண்டு. ஆனால் காதல் என்ற ஒரு உணர்வு என்னவென்று தெரிய முன்பே காதலைத் துறந்தவர்களில் நானும் ஒருத்தி. காதல் என்றால் பெற்றோர்களால் ஒத்துக்கொள்ள முடியாத விடயமென்ற பெற்றார்களின் நடைமுறைகளால் அதை மனதில் முளைக்கவிடாமல் மனதைப் பாலைவனமாக்கி, காதெலென்ற பயிரைப் பக்கத்து வீட்டுப் பொன்னையாவோ அல்லது சந்தி வீட்டுச் சின்னையாவோ என்று மனதில் நாட்ட முயற்சித்தாலும், அதை முளைக்க முன்பு அப்படியே கருவிலேயே கசக்கின என்னை மாதிரி எத்தனையோ பெண்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்!

அப்போ! காதலின் மறுபக்கம் நரகமா? எதற்காக அது எமது பழைய பண்பாட்டில் இலகுவாக அங்கீகரிக்கப்படவில்லை?

இன்னெமொரு விடயம், எனது சக வயது சண்முகம், இப்போ அவன் செத்தும் விட்டான், ஊரில் பெற்றாருக்கு ஒரே மகன் தனக்குப் பிடித்த பெண்ணை விரும்பி மணந்தான். பெற்றாரின் எதிர்ப்பைக் கண்கொண்டு பார்க்க முடியாது. "என்னுடைய பிரேதத்திலும் முழிக்கக் கூடாது" என்று சபதமெடுத்தார் சண்முகத்தின் தகப்பன். அதே மாதிரி மரணப்படுக்கையிலும் "மகன் வந்தால் படலைக்கு உள்ளே விடாதேங்கோ" என்று மனைவியிடம் சத்தியம் வாங்கிவிட்டுத்தான் கண்ணை மூடினார் அந்தப் பெரியவர். தாய் கருவை சுமக்கும் பொழுது, ஆண்மகன் பிறக்கவேண்டுமென்று பல கோவில்களுக்கு வேண்டுதல் செய்து, பிள்ளை பிறந்தவுடன் ஆம்பிள்ளைப்பிள்ளை பெத்துவிட்டாளென்று பக்கத்து வீடுகளுக்குத் தெரியப்பண்ண பிரசவம் பார்த்த மருத்துவிச்சி கூரையில் தட்டி வெளிப்படுத்தி பின் "சாஞ்சாடு அப்பா! சாஞ்சாடு! சாலக்குயிலே சாஞ்சாடு! குத்து விளக்கே சாஞ்சாடு! கோல மயிலே சாஞ்சாடு" என்று தாலாட்டுப் பாடி, தங்கத்திலே அரை ஞாண் கயிறு கட்டி காற்ச்சட்டையும் அணிவிக்காமல் தெருவில் புழுதி அளைய அனுமதித்து, மிகப் பெருமையுடன் பெயரைக் கூடச் சொல்லாமல் "தம்பி! தம்பி! ஆசைத்தம்பி என்று வளர்த்து, தம்பி அவனுக்குப் பிடித்த ஒரு நாயகியைத் திருமணம் செய்ய முற்பட்டவுடன் "என்னுடைய சவத்திலும் முழியாதே" என்று சாபம் கொடுக்க இந்தப் பெற்றார்களுக்கு எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ! விரும்பினவுடன் ஒரு பெண் சென்றால், "ஓடிப்போனவள், எடுபட்டு வந்தவள்" அது மட்டுமா? "கிளப்பிக் கொண்டு வந்தவன்! ஏன் அவன்ரை சித்தப்பனும் அப்படித்தானே" என்று எத்தனை அம்பு வார்த்தைகள்.

ஓடிப்போனவன்ரை அண்ணன், ஓடிப்போனவளின் முன்வீடு என்று காதல் சிட்டுகள் ஒரு மைல் கல்லாக சீல் குத்தப்பட்டிருக்கிறார்கள் நடைமுறையில்.

ஆனால் காதலைப் பற்றிப் பேசவிட்டால் தாஜ்மகாலே கட்டுவோம். சினிமாவில் காதலன் காதலியைக் குதிரையில் கடத்திக்கொண்டு

(19ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் கச்சேரிக்கும் புங்கங்குளத்திற்கு மிடையில் எட்டுப் பரப்புக் காணியில் ஒரு பகுதியில் ஐந்து அறைகள் கொண்ட வசதிகள் யாவும் அடங்கிய வீட்டுடன் சுற்று மதிலுடன், விற்பனைக்கு உண்டு.

விலை: £52,000/-

தொடர்புகளுக்கு: 0208 907 1548

R.R. Metal Work

❑ Railings ❑ Staircases ❑ Gates ❑ Window Grills ❑ Fabrication

உங்கள் எண்ணங்கள்.... குமாரின் கைவண்ணத்தில்

Tel: 0208 648 8207, Mob: 07753 200261

தமிழில் பேசி உங்கள் தேவைகளைச் சொல்லி அழகான வேலைப்பாடு கொண்ட வேலைகளைச் செய்யுங்கள் - குமார்

Private
Chemistry Tuition
-GCSE, AS, A2 & Degree level classes
- by a highly qualified and experienced professional
- Group or individual lessons can be arranged
* All syllabuses convered * Small groups of students
* Revision classes * Past Exam Paper Classes
To discuss, Contact: 07931514247

New Classes in Tooting & Harrow
Start on saturday 20.08.2005

உண்மைகள் நங்குவதில்லை

'நிர்வாணம்' டாக்டர் ஸ்ரீதரன் பக்கம்

சனீஸ்வரன்கள்

முகத்தில் கலவரம் ததும்ப - கண்களில் சோகம் வெளிப்பட - விரக்தியே உருவாக - இங்கும் அங்குமாக நிம்மதியற்று நடந்து கொண்டிருந்த சனி பகவானிடம் - அதற்குரிய காரணத்தை வினவுகிறான் அவரின் மனைவி. ஒரு பெருமூச்சுடன் இலண்டனைச் சுட்டிக் காட்டி - தன் கவலைக்குரிய காரணத்தை மனைவிக்கு விளக்குகிறார் சனிபகவான்:

உனது வலது பக்கம் பார். கலாச்சாரம் என்ற பம்மாத்து வார்த்தைக்கு அர்த்தம் புரியாமல் - அதற்கு அர்த்தம் கொடுக்க முனைந்து - தன் மகள் இலண்டனில் வாழ்ந்தாலும் அவளை ஒரு தமிழ்ப் பெண்ணாகவே வளர்க்க வேண்டும் என்று முட்டாள்த்தனமாக கங்கணம் கட்டிக்கொண்டு - வழுக்கி விழும் தன் கால்சட்டையை ஒரு கையால் மேலே தூக்கிக்கொண்டு - மறு கையில் - ஏதோ ஒரு ஜன்ம சாபம் போல - அந்த இயேசுநாதர் சிலுவையை தூக்கியது போல - மகளின் வீணையைத் தூக்கிக்கொண்டு - கர்ணனுடன் தோன்றிய கவச குண்டலத்தை போல சதா ஒரு கறுப்புக் கோர்ட்டையும் கழுத்துப் பட்டியையும் அணிந்து கொண்டு - உண்டது பாதி - உறங்கியது பாதியாக - இலண்டன் கலைக் கோவிலில் நடைபெறும் வீணை வகுப்புக்கு தன் மகள் அபிராமியை அழைத்துச் செல்கிறதே - கர்நாடக சங்கீத அறிவே அற்ற - ஒரு ஒல்லியான - நோயாளி போன்ற - பட்டினத்தாருக்கு கால்சட்டை போட்டது போல ஒரு உருவம் - அது தான் டாக்டர் ரவி!

உனது இடது பக்கம் பார். நான் ஒரு மிக பெரிய மனிதன் என்று நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் காட்டுவதற்காக இலண்டனில் ஒரு மிக பெரிய வீட்டையும் தேவையற்ற ஆடம்பர பொருட்களையும் தவணை முறையில் வாங்கி விட்டு - வாங்கிய வீட்டையும் பொருட்களையும் அனுபவிக்க வழியில்லாமல் - மாதாமாதம் கட்ட வேண்டிய கடனுக்காக - ஒரு வேலை போதாதென்று இரண்டு இடங்களில் வேலை பார்த்துக் கொண்டு - எனது வீடு ஒரு பெரிய வீடு - நான் ஒரு பெரிய மனிதன் என்ற நினைவுகளையும் மட்டுமே மனதில் சுமந்து கொண்டு - குடும்ப அழுத்தம் - வேலை அழுத்தம் - இப்படி எத்தனை எத்தனையோ அழுத்தங்களுடன் - இரத்த அழுத்தத்தையும் உருவாக்கிவிட்டு - அதை குறைப்பதற்காக மாத்திரைகளை விழுங்கிக்கொண்டு - அலுவலகத்தில் தூங்கி வழிகிறதே ஒரு சொட்டை தலை - அது தான் பிரதம கணக்காளர் குமார்.

இவர்கள் இருவருடனும் நான் அடுத்த ஏழரை வருடங்களுக்குத் தொடர்ந்து வாசம் செய்து - இவர்களுக்கு அளவில்லாத கஷ்டங்களை உண்டாக்க வேண்டுமென்பது பரமன் கட்டளை! ஆனால் இவர்களோ, இலண்டனுக்கு வந்ததிலிருந்து என்னால் ஏற்கனவே பீடிக்கப்பட்டது போலவே வாழ்ந்து வருகிறார்கள்! இதற்கும் மேல் இவர்களுக்கு

(19ம் பக்கத் தொடர்ச்சி)

அபஸ்வரம்

வீணை வகுப்புகள் - தமிழ் பாடங்கள் - பரத நாட்டிய பயிற்சி.

கடந்த இருபது வருடங்களாக இலண்டனில் வாழும் டாக்டர் ரவி - இலண்டனில் பிறந்து வளரும் பதினைந்து வயதான தன் மகள் அபிரர்மியை ஒரு தமிழ் பெண்ணாக வளர்க்க எடுக்கும் முயற்சிகள் இவை! பட்டுப் பாவாடை அணிந்து - அதே சமயம் அந்த பாவாடைக்கும் தனக்கும் எது வித சம்பந்தமும் இல்லாதது போல ஒருவகை நவநாகரீக இலண்டன் நடை நடந்து - மார்பகத்தை நிமிர்த்தி - பிரதி சனிக்கிழமையும் இலண்டன் கலைக்கோவிலுக்கு அபிராமி செல்லும் அழகைக் கண்டு பூரித்துப்போவார் டாக்டர். இருக்காதோ! பாவாடை தாவணி அணிந்திருக்கிறாளே அவரது மகள்! எவ்வளவு கலாச்சாரமாக வளர்க்கிறார் தன் மகளை!

ஒரு நாள் பெற்றோர்கள் இல்லாதபோது - அபிராமியின் வீட்டிற்கு வந்திருந்த அவளின் ஆங்கில சிநேகிதி ஒருத்தி அபிராமியின் வீணையைப் பார்த்து கேட்ட கேள்வி:

"Appi! What is this long wooden thing?"

அலட்சியமாக வீணையை காலால் தட்டியபடியே அபிராமியின் பதில்:

"Oh! This is that stupid thing called Veena. You know it makes some funny noise like - NONGGG .. NONGGG. Wait and see.. I will break this bloody thing one of these days"

தமிழ் பாடசாலையில் ஒரு நாள் மகாகவி பாரதியின் பாடல் ஒன்று அபிராமிக்கு சொல்லித்தரப்பட்டது. இன்று என்ன படித்தாய் என்ற ரவியின் கேள்விக்கு chewing gum ஐ மென்ற படியே அபிராமியின் பதில் ஆங்கிலத்தில்:

(19ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றுக்குடங்கள்

அன்று சனிக்கிழமை. நேரம் இரவு பன்னிரண்டு மணி. மாடியில் அமைந்திருக்கும் தனது படுக்கை அறையில் சுகமாக உறங்கும் சுகந்தனின் தூக்கம் கலைகிறது, அந்தத் தெருவே அதிரும்படி குறைத்த அவனுடைய நாய் திருவள்ளுவரினால். சுகந்தன் ஒரு நித்திரை பிரியன். அதைக் கெடுக்கும் எதையும் அவ னால் பொறுத்துக் கொள்ள முடி யாது.

திருவள்ளுவரை அதட்டி மேலே அழைத்து அது மேலும் குறைக்காதவாறு அதை ஒரு அறையில் பூட்டி விடுகிறான். அதன் பின் நிம்மதியான உறக்கம் சுகந்தனுக்கு.

மறுநாள் காலை மிகப் பெரிய கொட்டாவியுடன் அமர்க்களமாக கண் விழித்த சுகந்தனுக்கு மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட் களெல்லாம் இரவு திருட்டுப் போய் விட்டன!

நடந்ததைக் கேட்ட சுகந்தனின் நண்பனுக்கு ஒரே சிரிப்பு. அவன் சுகந்தனுக்கு உரைத்த கீதை இது:

உனது நாயின் குரைப்பு ஒரு காரியம். அதன் காரணம் இங்கு நடமாடிய திருடன். காரணம் இன்றி இங்கு ஒரு போதும் காரியம் இல்லை. ஆனால் காரணத்தை அறியாமல் - அறிய முயற்சிக்காமல் - காரியத்தை மட்டும் பார்த்து - அதற்குப் பரிகாரம் தேட முயற்சித்தால் - காரணம் மிக விபரீதமான வேறு பல புதிய காரியங்களை உருவாக்கி விடும்.

சுகந்தனுக்கு இது நன்றாகவே புரிந்தது.

ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன.

சுகந்தன் இன்று ஒரு ஆங்கில டாக்டரைப் பார்ப்பதற்காக வைத்திய சாலைக்குச் சென்று கொண்டிருக்கிறான். கடந்த சில தினங்களாக அவனுக்கு ஒரு வகை வயிற்று வலி. எப்போது வரும் - எப்போது போகும் என்று சொல்ல முடியாது. இப்பொழுதெல்லாம் அவனால் நன்றாக உறங்கக் கூட முடிவதில்லை.

சுகந்தனின் குறையைக் கேட்ட டாக்டர் கூறினார்:

இன்றிலிருந்து அந்த வயிற்று வலி வரும்போது நான் இப்பொழுது கொடுக்கும் மாத்திரையை அருந்துங்கள். உடனே வலி பறந்துவிடும். நிம்மதியாக உறங்கலாம்.

வெளியே வந்து மாத்திரைகளை குப்பைத் தொட்டியில் போட்ட சுகந்தன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்:

குரைத்த நாயை மேலே அழை த்து அதை அறையில் அடைத்த நான் ஒரு குறை குடம். வயிற்று வலிக்கு மாத்திரை தந்து வலியை மட்டும் மறைக்க வைக்கும் இவன் ஒரு வெறும் குடம்.

எத்தனை குறைகுடங்களை பரலோகம் அனுப்பியிருக்கிறார்கள் இந்த வெற்றுக்குடங்கள்!

Miracles are taking place every day!

Feel the powers of

Sai Lal Baba

Are you facing problems in: Marriage, relationship, black magic, curses, business, exams, children of family?

If any of my brothers and sisters are facing difficulties in their life and if they have wasted their time with other spirtial healers or holy men who have left their work incomplete in the past, they don't need to worry any more. No matter how difficult you problems are, no matter where you live, just contact SAI LAL BABA.

See how he can solve your problems for EVER by tabeez, yantras, mantras, talisman stones and his experience to remove black magic and evil spirits.

You can have all the happiness in your life you are looking for in one night prayer only.

Make a call and get 100% sure help GUARANTEED!!

My service is completely confidential

Sai Lal Baba

87 Francis Road, Harrow HA1 2RA Tel: 020 8861 5839 Mob: 07947 953 533

லண்டனில் கன்னடத்து பைங்கிளி

"புதினம்" இதழுக்காக ஒரு இனிய சந்திப்பு

டாக்டர் எஸ். தியாகராஜா

பொற்காலத் தமிழ்த் திரையின் புகழ் பூத்த தாரகையாகத் திகழ்ந்த சரோஜா தேவியை 'புதினம்' பத்திரிகையின் சார்பில், அவரது குடும்ப நண்பர்களான ராதாகிருஷ்ணன் - பத்மா தம்பதிகளின் குறொய்டன் இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பு இவ்வாரம் எனது மனைவியார் கலைவாணிக்கும் எனக்கும் கிட்டியது. அறுபதாம் ஆண்டுகளில் தமிழ்ப்பட ரசிகர்களின் கனவுக்கன்னியாகக் கொடிகட்டிப் பறந்தவர் சரோஜா தேவி! தமிழில் மட்டுமல்ல தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய நான்கு மொழிகளிலும் பல வெற்றிப் படங்களைத் தொடர்ந்து தந்தவர். அறுபதுகளின் மத்தியில் அதிக ஊதியம் பெற்ற தமிழ் நடிகை இவர். கதாநாயக ஆதிக்கம் மிகுந்த தமிழ்த் திரை உலகில் தனக்குப் பிடித்தமான கதைகளில், தனக்குப் பிடித்தமான நடிகர்களுடன், தான் தெரிவு செய்த பாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்ததை இன்னும் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்.

அயராத உழைப்பினாலும், இடைவிடாத முயற்சியினாலும் முன்னுக்கு வந்தவர் சரோஜாதேவி 'முயற்சி இல்லாத எவரும் முன்னுக்கு வர முடியாது' என்கிறார்.

பெங்களூரில் பிறந்த சரோஜா தேவி அவரது பத்தாவது வயதில் 'மகாகவி காளிதாஸ்' என்ற கன்னடப்படத்தில் அறிமுகமானார். மணாளனே மங்கையின் பாக்கியம், தங்கமலை ரகசியம், பூலோக ரம்பை ஆகிய படங்களில் நடனமாடும் சிறிய பாத்திரங்கள். இல்லறமே நல்லறம், சபாஷ் மீனா ஆகிய படங்களில் முக்கிய பாத்திரங்களை ஏற்ற சரோஜாதேவிக்கு 1958ம் ஆண்டில் வெளிவந்த நாடோடி மன்னன் படத்தில் மூன்று நாயகிகளில் ஒருவராக நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாடோடி மன்னன் பெற்ற வெற்றி அவரை நாயகி ஸ்தானத்திற்கு உயர்த்தியது.

நடிகை சரோஜாதேவி தங்கியிருந்த அவரது குடும்ப நண்பர்களான ராதாகிருஷ்ணன் இல்லத்தில் எடுத்த படம். இடமிருந்து வலம், திருமதி கலைவாணி ராதாகிருஷ்ணன், சரோஜாதேவி, 'புதினம்' இதழுக்காக சந்தித்த கட்டுரையாளர் எழுத்தாளர் டாக்டர் எஸ். தியாகராஜா. படப்பிடிப்பு: ராதாகிருஷ்ணன்

கல்யாணப் பரிசு:

சரோஜாதேவியை அக்காலத் தமிழ்த்திரையின் தலையாய மூன்று நடிகைகளில் (பத்மினி, சாவித்திரி) ஒருவராக உயர்த்திய படம் ஸ்ரீதரின் காவியமான 'கல்யாணப் பரிசு' படம்தான்.

குறும்புத்தனமும், குறுகுறுப்பும் கொண்ட கல்லூரி மாணவியாக - கலகலப்பான காதல் நாயகியாக - அக்காதலை அக்காவுக்காக தியாகம் செய்து, காதலனுடன் இணைத்து பண்பில் பெருமை காணும் தியாகியாக - வேறுபட்ட பல்வகையான உணர்ச்சிகளைக் காட்டி - சிறப்பான திரை நடிகையாக தன்னை உருவாக்கிக் கொண்டார் சரோஜாதேவி.

கல்யாணப் பரிசின் அபாரமான வெற்றியைத் தொடர்ந்து பாகப்பிரிவினை, கைராசி, விடிவெள்ளி, பனித்திரை, பாலும் பழமும், ஆடிப்பெருக்கு, ஆலயமணி என வரிசையாகப் பல வெற்றிப்படங்களில் சிவாஜியுடனும், ஜெமினி கணேசனுடனும் இணைந்து சிறப்பாக நடித்தார்.

எம்.ஜி.ஆர்:

ஏற்கனவே நாடோடி மன்னனின் மூன்று நாயகிகளில் ஒருவராக நடித்திருந்த போதிலும், 1961ஆம் ஆண்டில் வெளிவந்த தாய் சொல்லைத் தட்டாதே, திருடாதே ஆகிய படங்கள் தாம் எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி ஜோடிக்கும் பிள்ளையார் சுழி போட்டன. எம்.ஜி.ஆர் மிகப் பிரபலமாகிக் கொண்டிருந்த இக்காலகட்டத்தில் அவரோடு சேர்ந்து சரோஜாதேவியும் புகழ் பெற்றார்.

நடோடி மன்னன் (1958) முதல் அரச கட்டளை (1967) வரை 24 படங்களில் எம்.ஜி.ஆரோடு ஜோடி சேர்ந்து நடித்தார் சரோஜாதேவி. இப்படங்களில் பெரும்பாலானவை வசூலில் வெற்றி கண்டவை.

சிவாஜி கணேசன்:

சரோஜாதேவி சிவாஜியுடன் ஜோடி சேர்ந்த முதல் படம் பாகப்பிரிவினை (1959). தொடர்ந்து பாலும் பழமும், ஆலயமணி, பார்த்தால் பசி தீரும், இருவர் உள்ளம், குலமகள் ராதை, புதிய பறவை என சிறப்பான பல படங்கள் வெளிவந்தன. பாகப்பிரிவினை முதல் ஒன்ஸ் மோர் (1997) வரை 17 படங்களில் சிவாஜியும் சரோஜாதேவியும் இணைந்தார்கள்.

ஜெமினி கணேசன்:

சரோஜாதேவியின் ஆரம்பகாலப் படங்களில் ஜெமினி-சரோஜாதேவி பிரபலமாக விளங்கிய ஒரு ஜோடியாகும். கல்யாணப் பரிசு, வாழவைத்த தெய்வம், எல்லாரும் இந்நாட்டு மன்னர், கைராசி, பனித்திரை ஆகியன அவர் எம்.ஜி.ஆரோடு இணைவதற்கு முன்பு வெளிவந்த ஜெமினி கணேசன் படங்கள்.

1967இல் எம்.ஜி.ஆர் சரோஜாதேவியை விட்டு ஜெயலலிதாவுடன் ஜோடி சேர்ந்தபின் சரோஜாதேவி திரும்பவும் ஜெமினியுடன் பணமா பாசமா, தாமரை நெஞ்சம், குல விளக்கு, ஐந்து லட்சம், சினேகிதி, மாலதி போன்ற பல வெற்றிப்படங்களில் பவனி வந்தார். ஜெமினி - சரோஜாதேவி இணைந்து நடித்த படங்கள் 21.



நடிகை சரோஜாதேவியின் லண்டன் குடும்ப நண்பர்களான ராதாகிருஷ்ணன்- பத்மா தம்பதி.

சரோஜாதேவிக்கு சிறந்த ஜோடி:

சரோஜாதேவிக்குச் சிறந்த ஜோடி யார்?

எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி ஜோடி, எம்.ஜி.ஆர் ரசிகர்களால் பரபரப்பாகப் பேசப்பட்ட போதிலும் அவர் மூன்று நாயகர்களுடனும் சிறப்பாக இணைந்து நடித்தார் என்பதே நிதர்சனமான உண்மை. பாலும் பழமும், ஆலயமணி, குலமகள் ராதை சரோஜா தேவி போல சிவாஜியுடன் சிறப்பாக இணைந்து நடித்த நடிகைகள் யார்?

கல்யாணப் பரிசு, கைராசி, பனித்திரை சரோஜாதேவி பேலா ஜெமினி கணேசனோடு இணைந்தவர்கள் எவரும் இல்லை.

இதுவே அவரது வெற்றியின் ரகசியம்.

சிறந்த படம்:

"நீங்கள் நடித்த படங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த படம் எது?" என்ற கேள்விக்கு, தான் நடித்த எல்லாப் படங்களுமே தனக்குப் பிடிக்கும் என்றார். சரோஜாதேவி. தனது ரசிகர்கள் எவரையும் புண்படுத்த வேண்டாம் என்பதற்காகக் கூறிய பதில் போலப்பட்டது இது!

மிகவும் வற்புறுத்திக் கேட்ட போது -

எம்.ஜி.ஆருடன் நடித்த படங்களில் "அன்பே வா" என்றும், சிவாஜியோடு நடித்த படங்களில் "பாலும் பழமும்" என்றும், ஜெமினி கணேசனோடு நடித்தவற்றில் "கல்யாணப் பரிசு" என்றும் பதிலளித்தார்.

'கல்யாணப் பரிசு', அதன் இந்திப் பதிப்பான 'நஸ்ரானா', தெலுங்குப் பதிப்பான 'பெள்ளி கனுகா' யாவும் பெருவெற்றி பெற்ற படங்கள். தமிழிலும், தெலுங்கிலும் தானே கதாநாயகியாக நடித்ததை பெருமையாக நினைவு கூர்ந்தார்.

பரிசுகளும் விருதுகளும்:

சரோஜாதேவி நடித்த படங்களில் கல்யாணப் பரிசு, பாகப்பிரிவினை இரண்டு சிறந்த படங்களுக்கான தேசிய விருதைப் பெற்றன. தாமரை நெஞ்சம் (1968), குலவிளக்கு (1969) ஆகிய படங்களுக்கு சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்றுக் கொண்டார். 1969ல் பத்மஸ்ரீ விருதையும், 1992ல் பத்ம பூஷண விருதையும் பெற்றுக் கொண்டார். இவ்விருதுகளைப் பெற்ற தென்னிந்திய நடிகைகள் இருவர் மட்டுந்தான்; ஒன்று பி. சரோஜாதேவி, மற்றது பி. பானுமதி.

(19ம் பக்கம் பார்க்க)

SHRE THIRUTHANIKAI VALE MURUGAN TEMPLE

ஸ்ரீ திருத்தணிகை வேல் முருகன் ஆலயம்

255 Burlington Road, Newmalden, Surrey KT3 4NE

0208 942 4475, 0208 641 7835, 07908 723 428, 07944 771 805, Fax: 0208 408 9666

பூஜை நேரம்: காலை 10 மணி, மதியம் 12 மணி, பி.ப. 8 மணி

Open 7 Days a week

9an - 2 pm, 6 pm - 9.30 pm, Friday & Auspicious Days, 9 am - 2 pm, 6 am - 10.30 pm

Pooja Commences at: 8 am, 10 am, 12 pm, 8 pm

Abishegams: Friday & Auspicious Days 11 am, Other days by request at 11.00 am or 7.30 pm

உபயங்கள் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Other Services: Weddings, Punyavaachanams, Baby Blessings, Thivasams, Navakkragahsanthy, Sevvai Thosa Santhy

விஷேச ஹோமங்கள் என்பன சிறப்பாக மேற்கொள்ளலாம். செவ்வாய் ராகு கால பூஜை சிறப்பாக நடைபெறுகிறது.

Classes: Hinduism, Caranatic Vocal, Veena, Violin, Miruthangam, Tamil, Yoga & Meditation, Flute

டயானாவின் கர்ப்பத்தினால் ஏற்பட்டதே மரணம்!

'டெயிலி எக்ஸ்பிரஸ்' வாக்கெடுப்பில் கணிப்பு

மழை விட்ட பின்னும் தூவானம் விட்ட பாடில்லை என்பது போல, பிரிட்டனின் இளவரசி டயானா மறைந்து எட்டு வருடங்களாகியும், அவரது மரணத்தைச் சுற்றியுள்ள மர்மம் விட்டுவிட்டதாகத் தெரியவில்லை.

அவர் பிரெஞ்சுத் தலைநகரான பாரிஸில் விபத்தில் சிக்கி மரணமடைந்தபோது, கர்ப்பமாகவிருந்தார் என்ற தகவல் ஒன்று முன்னர் ஏற்கனவே பரவலாகக் கூறப்பட்டது. ஆனால், அதை பிரிட்டிஷ் அதிகாரிகள் மறுத்திருந்தனர்.

இப்போது, அதற்குப் புது மெருகூட்டப்பட்டுள்ளது.

டயானாவையும் அவரது காதலர், டோடி ஃபயட்டையும் பலி வாங்கிய கார் விபத்து பற்றிய புலன்விசாரணையில் உதவி புரியும் ஓர் சிரேஷ்ட பிரெஞ்சு வழக்கறிஞர், விபத்து நடைபெற்ற சமயம் டயானா கர்ப்பம் தரித்திருந்தார் என்பது புலன் விசாரணையில் நிரூபணமாகுவென அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாரிஸ் நகரில் இச்சோக விபத்து 1997ல் நடந்து முடிந்த சில நாட்களுக்குள்ளேயே, இந்த உண்மை மூடிமறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னர், 'உங்களுக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருக்கிறது' என்று பத்திரிகையாளர்களிடம் கூறியிருக்கிறார். இது தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தை பற்றியதே என்றே பலரும் கருதுகிறார்கள்.

டயானாவின் கர்ப்பம் பற்றிய புலன் விசாரணையை, முன்னாள் லண்டன் 'மெற்றோ பொலிற்றன்' பொலிஸ் தலைவரான ஸ்டீவன்ஸ் பிரபு நடாத்துகிறார். அவரது விரிவான புலன் விசாரணை, இளவரசி டயானா எவ்வாறு தனது அகால மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்பதைக் கண்டுபிடித்து நிரூபிப்பதற்கான ஒரு இறுதி முயற்சியாக அமையும் எனச் சொல்லப்படுகிறது. அவருடைய கார் விபத்தின் சமய சந்தர்ப்பங்களையிட்டுப் பலமான முரண்பாடுகள் நிலவி வந்துள்ளன.

டோடியினுடைய தந்தையாகிய, 'ஹரோட்ஸ்' என்ற பிரிட்டனில் பிரபலமான வர்த்தக நிலையச் சொந்தக்காரர். மொகமெட் அல் ஃபயட், தனது மகனைத் திருமணஞ் செய்வதாலோ அல்லது அவர் மூலம் குழந்தையொன்றைப் பெறுவதாலோ பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு தர்மசங்கடமான நிலையொன்றைத் தடுக்கு முகமாக, டயானாவை பிரிட்டிஷ் 'ஏஜெண்ட்' கள் திட்டமிட்டுக் கொலை செய்ததாகவே ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்துள்ளார்.

அண்மையில், இவரது இந்தக் கருத்துப் பற்றிய தொலைபேசி வாக்கெடுப்பொன்றைப் பிரபல பிரிட்டிஷ் நாளிதழான 'டெயிலி எக்ஸ்பிரஸ்' (Daily Express) அண்மையில் நடாத்தியபோது, டயனாவின் மரணம் ஓர் விபத்தல்ல என்று தாம் நம்புவதாக 94 சதவீதமானோர் தெரிவித்திருப்பது, அவரது கோட்பாட்டுக்கு பலமான ஆதரவாக அமைந்துள்ளது.

பலதும் பத்தும்

மனோ மயில்

லண்டனில் சைக்கிள்களுக்கு திடீர் மவுசு

லண்டனில் இப்போது சைக்கிளுக்கு என்றுமில்லாதவாறு மதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்களிடையே அதற்கு அதிக தேவை அவசியமாகிவிட்டது.

இதற்குக் காரணம் என்னவென்பதை நீங்கள் ஊகித்திருப்பீர்கள்.

ஆம். லண்டனில் ரயில்கள், பஸ்களில் குண்டுகள் வெடிப்பது தான் காரணம்.

தங்களுடைய அலுவலகங்களுக்குச் செல்லவும், அன்றாட அலுவல்களைப் பார்க்கவும் தற்போதைய சூழ்நிலையில் சைக்கிளே பாதுகாப்பான போக்குவரத்துச் சாதனம் என்று பலரும் நினைக்கத் தொடங்கிவிட்டனர்.

இதன் பயனாகச் சைக்கிள் கடைக்காரருக்கு நல்ல யோகம் அடித்துள்ளது. ஒரு நாளைக்கு ஐந்து சைக்கிள் விற்பனையாகும் கடையில் ஏறத்தாழ ஐம்பது சைக்கிள்கள் விலைப்படுவதாக செய்திகள் கூறுகின்றன.

இது ஒரு புறமிருக்க, தோல்வியடைந்த குண்டுத்தாக்குதல் முயற்சிகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ள போதும், லண்டனிலும் - இப்போது சுற்றுப் புறங்களிலும் கூடவே என்றும் சொல்கிறார்கள் - குண்டு வெடிப்பு ஆபத்து இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது என்று' மெற்றோ பொலிற்றன்' பொலீஸார் தெரிவித்திருப்பது மக்களிடையே பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயர்நீதிமன்ற கரங்களில் ஊசலாடும் தாஜ்மஹால்!

இந்தியாவின் கலாச்சாரச் சின்னமாகவும், உலக அதிசயங்களில் ஒன்றாகவும், மொகலாய பேரரசின் கட்டிடக் கலைக்கு ஒரு சான்றாகவும், காதலர்களுக்கு ஓர் காதற்கனவு ஆலயமாகத் தரிசனம் தருவதுமான அழகுமிகு தாஜ்மஹால் இன்று சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது.

அதனுடைய எதிர்காலம், அலஹபாத் உயர்நீதிமன்றத்தின் கரங்களில் இப்போது தங்கியுள்ளது.

மொகலாயப் பேரரசின் கடைசி வாரிசுகள் ஒரு புறமும், இஸ்லாம் மதத்தைச் சார்ந்த சிலர் மறுபுறமுமாகத் தாஜ்மஹாலுக்குச் சொந்தம் கொண்டாடுகின்றனர். இந்த விவகாரம் நீதிமன்றப்படிகளுக்கும் ஏறிவிட்டது.

இதைக் கையாளும் அலஹபாத் உயர்நீதிமன்றம், தாஜ்மஹால் யாருக்குச் சொந்தம் என்பதை விசாரித்துச் சொல்லும்படி, உத்தரப் பிரதேச மாநில வஃபு வாரியத்தைக் கேட்டிருந்தது. அப்போதுதான் வந்ததே வினை!

'தாஜ்மஹால், இஸ்லாமியர்கள் பலரது புதைகளம், அதாவது, கல்லறைத்தோட்டம். ஆகவே, அது வஃபு வாரியத்தின் சொத்தாகவே இருக்க முடியும்' என்று வஃபு வாரியம் அடித்துக் கூறியுள்ளது.

ஆனால், இந்திய தொல்பொருள் ஆய்வு இலாகாவோ, 'இது இந்தியாவின் தேசிய சொத்து'. மக்களின் வரிப்பணத்தால் கட்டப்பட்ட தாஜ்மஹால், மன்னராட்சிக்குப்பிறகு வந்த மக்களாட்சிக்கே சொந்தம். ஆக, தொல்பொருள் இலாகாவுக்கேசொந்தம்'' எனத்தனது வாதத்தை முன்வைத்துள்ளது.

இதற்கிடையில் பெங்களூரிலுள்ள ஓர் நட்சத்திரக் ஹோட்டலில் பணியாற்றும் மொகலாய சாம்ராஜ்யத்தின் கடைசி மன்னர் பகதுர்ஷா ஜாபாரின் வாரிசான மைசூதீன் துசி எனபவர் வெளியிட்டுள்ள கருத்து மெச்சத்தக்கதாகும்.

''தாஜ்மஹால் எங்கள் பரம்பரைச் சொத்து. ஆனால் நாங்கள் அதற்கு உரிமை கோரவில்லை.இனியும் உரிமை கோரப்போவதில்லை. உண்மையில் தாஜ்மஹால் ஒவ்வொரு இந்தியனுக்கும் சொந்தமே''

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

8வது சைவ மாநாடு

ஸ்ரீகணபதி ஆலயம் விம்பிள்டன் 20–8–05 சனிக்கிழமை

உயர்வாசற்குன்று ஸ்ரீ முருகன் ஆலயம் 21.08.05 ஞாயிற்றுகிழமை

காலை 9.00ல் இருந்து இரவு 9.00 மணிவரை மாநாடு நடைபெறும்.

சைவசமய அன்பர்களே!

எமது தாய்நாட்டில் எங்கள் இனம் மொழி, கலை, கலாச்சாரம் என்பனவற்றிற்கு சமத்துவநிலை கிடைக்கவேண்டுமென போராடுகின்றார்கள். இவ்வேளையில் நாம் எமது பிறந்த நாட்டைவிட்டு உலகின் வெவ்வேறு பாகங்களுக்குச் சென்று குடிபுகுந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறு நாம் சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் எமது மொழி, சமயம், கலை, கலாச்சாரங்களைப் பேணுவதற்கு எமக்குச் சுதந்திரம் உண்டு. இந்நிலையில் சைவ சமயக் கல்வியை எமது அடுத்த சந்ததியினருக்கு தகுந்த வகையில் அளித்திருக்கிறோமா? என்ற வினாவிற்கு நாம் அனைவரும் பதில் காணாமல் போய்க் கொண்டிருக்கிறோம். இவ்வாறான சூழ்நிலையில் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் ஒவ்வொரு வருஷமும் சைவ மாநாட்டினை நடாத்தி சைவப் பாரம்பரியங்களையும், விழிப்புணர்ச்சியினையும் எம் பிள்ளைகளிடையே பரப்பி வருகிறது. அந்த வகையில் இவ்வருஷமும்,

"சைவ சமயக் கல்வியும், அடுத்த சந்ததியினரும்"

என்ற கருப்பொருளை அடிப்படையாக கொண்டு எட்டாவது மாநாட்டினை நடாத்தவுள்ளது. இம்மாநாட்டினைச் சிறப்பிக்க,

கட்டளை விசாரணை, முனைவர் குமாரசுவாமித் தம்பிரான் M.A., Ph.D. (தர்மபுர ஆதினம்), செந்தமிழ் சிவநெறி செல்வர் ஆறுமுகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, திருமந்திர செல்வர் T.V. வெங்கட்ராமன், முன்னாள் செயலர், தமிழ்நாடு அரசு, இந்தியா, திரு. ச. மன்மதராஜா அதிபர், கொழும்பு இந்துக்கல்லூரி, இலங்கை, பிரம்மசிறி சி. ஜெகதீஸ்வர சர்மா, திருக்கணித பஞ்சாங்க சோதிட நிலையம், மட்டுவில் ஆகியோர்கள் வருகைதரவுள்ளார்கள்.

இன்னும் உள்நாட்டு சைவசமய அறிஞர்களும், பெண்மணிகளும், இளைஞர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

சைவ சமயிகள் அனைவரையும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

Dr. S. ஸ்ரீதரன், தலைவர், 01622 693 938
Dr. S. மகேஸ்வரன், செயலாளர், 020 8946 7890
K. ரங்கநாதன், பொருளாளர், 020 8998 1703.

ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் ஆலயங்கள்: ஸ்ரீ கணபதி ஆலயம், விம்பிள்டன், ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், இலண்டன் ஸ்ரீ சிவன்கோயில், உயர்வாசற்குன்று ஸ்ரீ முருகன் ஆலயம், ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயம்.

சமீபத்தில் கெய்ஸிலுள்ள பெக் தியேட்டரில் நடந்த கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்க (ஐ.இ) 'பூபாள ராகங்கள்-2005' நிகழ்ச்சியின் அழகான பாதகை. நிகழ்வில் இடம்பெற்ற படங்களின் தொகுப்பு இடம்பெறுகிறது.

(1) தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் 'அரசனின் புத்தாடை'. லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்கள் பங்கு பற்றிய இந் நாடகத்தை க.பாலேந்திரா இயக்கினார். (2) கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில் வழக்காடு மன்றம். ஸ்ரீ பிரசாந்தன்- இராஜமனோகரன்- சிறீகாந்தலிங்கம்- மாதவி சிவலீலன் ஆகியோர்.

திருமதி ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' 25 மாணவிகள் கலந்து கொண்ட 'பரத சங்கமம்' நடன நிகழ்ச்சி.

லண்டன்'ன் முன்னணி' இசைக் குழுவினரான துஷ்'- தனு (செல்லத்துரை) சகோதரிகள் நண்பர்களின் 'கானமழை' இன்னிசை நிகழ்வில் கலைஞர்கள் தாமோதரன்- தனு ஆகியோர் பாடுகின்றனர்.



(1) பிரதம விருந்தினர் எழுத்தாளர் உடுவை தில்லை நடராஜா (கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்) (2) 'பூபாள ராகங்கள் -2005 மலர் மதிப்பீட்டுரையைச் வழங்குகிறார் கம்பன் கழக ஸ்ரீ பிரசாந்தன் (3) வீரகேசரி ஆசிரியர் வி.தேவராஜ் (4) 'பூபாள ராகங்கள்-2005' விழா மலரை ஊடகங்களின் சார்பில் பெற்றுக் கொள்ளும் பிரபல ஒலிபரப்பாளர் ஐபிசி எஸ்.கே. ராஜன். வழங்குபவர் மலர் ஆசிரியர் மகாலிங்கம் சுதாகரன். (5) நன்றி சி.சிவலீலன்.



விழாவில் கலந்து கொண்டபிரமுகர்கள் முன் வரிசையில். நல்ல நிகழ்ச்சிகளை மண்டபம் நிறைந்த மக்கள் ரசித்தனர்.

வரலாற்றில் ஓர் ஏடு

அவனது மரணம் அகாலமானது
சடலம் கூட அனாதையானது.
முகவரி அறியா வண்ணம் அவனின்
முகத்தைச் சிதறச் சுட்டவன் மிருகம்.

யாராயிருப்பினும் –
எதுவாயிருப்பினும்–
உயிரின் மரணம் சோகமானதே

ஆயுதந் தன்னை ஏந்தும் உயிரும்
அழிவது நிஜமே! அதையும் உணர்க...

அநாதையாகிலும் அற்பனாகிலும்
அவனின் இந்த மறைவிற்காகவும்
ஐந்தாறு உயிர்கள் அழுவது உறுதி.

அசிங்கமான அரசியல் காக்க
ஆதிக்க வெறியில் அகிலம் மீது
ஆணவப் போக்கில் அருவருப்பாக
ஆயுத வேலியை அமைப்பவன் அழிக!

மனிதாபிமானம் மரணித்த மண்ணில்
மானிட சுதந்திரம் பேணுதல் இயலா...

அகாலத்திறந்த அவன்மேல் விழுந்து
அபலை ஒருத்தி அழுது துடித்தாள்
அவளின் பின்னே
ஐந்து குழந்தைகள்
அச்சத்தோடு
அதிர்ந்து நின்றன...

கூக்குரல் காற்றில் கூவிக் கலந்து
சாவின் துயரைக் காவி மறைந்திட...
சிதறிய உடலைச் சேர்த்து அள்ளி
சிலமணி நேர மௌனம் கலைய...
வீதியில் சிதறிய ரவைகளில் ஒன்று
மானிட உதிரச் சேற்றில் கிடந்தது.

அது–
செத்துப்போன
மானுடத்தின்
வரலாறொன்றின்
சின்னமாக...

ஆயிரமாயிரம் ஆண்டின் பின்னர்
அறிஞன் ஒருவன் இப்படி எழுதுவான்

"துப்பாக்கியால் அரசியல் செய்த
மானுடக் குரங்கின்
மகத்தான காலம்
இதுவென்றறிக! இதுவென்றுணர்க"

– ராதேயன்

பெண்

ஏடுகளில் முன்பக்கத்தின்
அட்டையில்
வீடுகளில் பின்பக்கத்தில்
அடுப்பங்கரையில்

கோடை

தங்க வளையலைக்கழற்றி
போராளியிடம் தந்தாள்
செலவுக்கு வைத்துக்கொள்
உங்களில் பலருக்கு
கைகளே இல்லை
எனக்கு எதுக்கு வளையல்

கூண்டு

விடுதலை ஆவாரா சிறையில்
இருந்து என்கணவர்?
சோதிடம் கேட்கிறாள்
கூண்டுக் கிளியிடம்!

மானம்

உன் கோவணம்
அவிழ்க்கப்பட்டதா?
அவன் கைகளை வெட்டு
கெஞ்சி கோவணம் கட்டாதே
அம்மணமாகவே போராடு

அரண்

என் வலகையில் ஐந்துவிரல்கள்
உண்ணவும் வணங்கவும் மட்டுமல்ல
அறையவும் தான்

மனிதன்

இவன் பசுவின் பாலைக்கறந்ததால்
பசு பால் தரும் என்கிறான்.
காகம் இவன் வடையை எடுத்தால்
காகம் வடையை திருடிற்று
என்கிறான்
இப்படியாக மனிதன்...

காசி ஆனந்தன் நறுக்குகள்

விரைவில் லண்டனில்

'புதினம்' 10வது ஆண்டு விழா

மண்ணின் உணர்வோடு
பாட்டும் பரதமும்
பின்னிப் பிணையும்
தமிழர் திருவிழா

உலகத் தமிழ்
சிறுகதைப் போட்டி

இலங்கை ரூபாயில் லட்சம் ரூபா பரிசுகள்

பல்லாயிரக் கணக்கான 'புதினம்' வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற கட்டுரைத் தொடர்

பிரபல எழுத்தாளர் கவிஞர்
இளவாலை அமுதுவின்

இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்

மீண்டும் அடுத்த புதினம் இதழில் ஆரம்பமாகிறது

லண்டன் ஸ்ரீ முருகன் கும்பாபிஷேக நிறைவுச் சிறப்பு மலராகவும்- தரணியெல்லாம் தமிழைப் பரப்பிய வண பிதா தனிநாயகம் அடிகளாரின் நினைவு மலராகவும் வெளிவந்துள்ள 'சுடரொளி' சிறப்பு மலர் வெளியீட்டு விழா இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய மண்டபத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் எஸ்.கே. கணபதி தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது. பிரபல பத்திரிகையாளர்கள் பொன் பாலசுந்தரம்- 'சுடரொளி' ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன் ஆகியோரை இணை ஆசிரியர்களாகக் கொண்டு வெளியாகும் இம்மாத சஞ்சிகையின் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவை சட்டத்தரணியும்- தமிழ் உணர்வாளருமான சிதம்பரம்பிள்ளை தம்பதி மங்கள விளக் கேற்றி ஆரம்பித்து வைத்தனர். முருகன் அலய பிரதம குரு கயிலை இராம நாகநாத குருக்கள் உரையாற்றுகிறார். ஆலய சலைவர் சம்பத்குமார் இராம நாதக் குருக்களிடம் பிரதியைப் பெறுகிறார். அருகே பொன் பால சுந்தரம்- எஸ்.கே. கணபதி ஆகியோர்.

வெண்புறாவின் 'மீண்டும் நடப்போம்'

தாயகத்தில் நலிவுற்றோருக்கு மிகப்பெரும் அளவில் இங்கிருந்து உதவி வரும் 'வெண்புறா' நிறுவனம் 'மீண்டும் நடப்போம்' நிகழ்ச்சியை Dulwich Park, London SE22 இல் சமீபத்தில் நடாத்தியது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காண்கிறீர்கள். இந்நிகழ்ச்சியூடாக இரண்டாயிரத்திற்கு அதிகமான ஸ்ரேலிங் பவுண்களை சேகரித்தது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக Sponsorship ஆல் கிடைத்த தொகையே இதன் பெரும் பகுதி.

லண்டனில் வல்வை தேசிய கோடை விழா- 2005

ஊரிலே இருந்த உணர்வை Rayners Park பெரிய மைதானத்தில் 17.07.05 ஞாயிறு அனுபவித்தோம். வல்வெட்டித்துறை பேரவையினர்ஏற்பாட்டில் சிறுவர்கள் முதல் பெரியவர் வரை உதைப் பந்தாட்ட போட்டி கள்- பெண்களுக்கான வலைப் பந்தாட்டம்- தலையணைச் சண்டை- கிறிஸ் கம்பம் ஏறல்- கபாடி- சங்கீதக் கதிரை போன்ற பல போட்டிகள். இடையிடையே சித்தப்பாவின் கொத்து றொட்டி- கூழ் இப்படி நல்ல பொழுது. பேரவைத் தலைவர் ஏ.எஸ். ஜெயபாலசிங்கம் விழாவை ஆரம்பித்து வைக்க முன்னாள் வல்வை நகர சபைத் தலைவர் பா. மகேந்திர ராஜா சிறப்பு விருந்தினர். ஆயிரம் ஆயிரம் என மக்கள் பேசி கூடி மகிழ்ந்திருந்தனர். வாழுக வல்லை பேரவை.

ஆழிப்பேரலை பலி கொண்ட வல்வை சிவா

'**வ**ல்வைச் சிவா' என்று அன்பாக அழைக்கப்படும் அமரர் கார்த்திகேசு சிவசண்முகநாதன் வல்வெட்டித்துறை மக்களால் நேசிக்கப்பட்டவர். அவரது பிரிவைத்துயரை கண்ணீர் அஞ்சலியுடன் இலண்டன் வாழ் வல்வெட்டித்துறை மக்கள் பகிர்ந்து கொள்கின்றனர். ஆழிப்பேரலை டிசம்பர் 26இல் இவன் உயிரைக் காவு கொண்டது கொடுமை! கனைத்துக், கர்ச்சித்துக் கலாரசனையோடு பாடி நாடகங்களில் காட்டிய பன்முகப்பட்ட அவரது நடிப்புத் திறமைகளை நினைத்து நினைத்து... ரேவடி ஐ.சி.வி. கழக கோல்காப்பு வீரரனாக, பின் வல்வையின் இணையற்ற கோல்காப்பு வீரனாக, பின்னர் பருத்தித்துறை, யாழ் மாவட்ட கோல்காப்பு வீரனாகத் திகழ்ந்து புகழ் பெற்றவர்! வண்ணப்படத்திலும் நடித்தவர்!

இலை முத்தி பழுத்து இத்துப் போய் வீழ்வது இயற்கை! குலை தள்ளும் வாழைகளை குறை வழியில் பறிப்பது குற்றமல்லவா?

லண்டனில்
இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்

இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

டாக்டர் ஆர். தியாகராஜன்

1.09.2005 முதல் இரு வாரங்கள் வரை

(Tooting Broad Way Tube Station க்கு சமீபமாக)

லண்டனில் தங்கியிருந்து நீண்ட கால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டுச் சிகிச்சை அளிக்கவுள்ளார். 03 மாதத்துக்கு ஒரு தடவை இந்தியாவிலிருந்து லண்டன் வந்து நோயாளர்களைப் பார்வையிடும் இவரிடம் சிகிச்சை பெற விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா(ASTHUMA), சர்க்கரை வியாதி என்ற டையபற்றிஸ்(DIABETES), எக்ஸிமா(ECZEMA), மலட்டுத்தன்மை பேரிமை(STERRILITY), ஆண்மைக் குறைபாடுகள்(IMPOTENCY) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம், மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு, மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி, ஒரு முழுமையான சிகிச்சையைப் பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (SIDE EFFECTS) முறையில் அனைத்து வியாதிகளுக்குக்கும் முழுமையான குணம் அளிக்கவல்லது.

டாக்டர் தியாகராஜனிடம்

லண்டனில் சிகிச்சை பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:

020 8767 8004 – 07833 341 693

இந்தியாவில் திருச்சியில் டாக்டரின் தொலைபேசி எண்: 0091 431 243 2946

அனைத்தும் 22 கரட் தங்க நகைகள்

SINGAPORE GOLD HOUSE

நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!

நகை வாங்க சிங்கப்பூர் போதாதேயுங்கோ! எங்களிடமே எல்லா நகைகளும் இருக்கின்றன

வைரத் தாலிக்கொடிகள் ✯ பதக்கம் சங்கிலிகள்
✯ நவரத்தின மோதிரங்கள் ✯ காப்புகள்
✯ நெக்லஸ்கள் ✯ தோடுகள் ✯ மோதிரங்கள்
✯ அட்டியல்கள்

ஆகிய நகைகள் மிகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும், பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகள் கொள்வனவு செய்யவும், பொன்னுருக்கல் செய்யவும் நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்



சிங்கப்பூர் நகை மாளிகை
233 THe Broadway, Southall, Middlesex UB1 1ND
Tel/Fax: 020 8843 0807

ENGINE TEC MOTORS

SERVICING AND REPAIR ALL MAKES OF CARS

We offer Facilities for:

- Servicing
- Overhauls
- Clutches
- Car Electrically
- Breakes
- Pre Mot Checks

Insurance Work Undertaken

உங்கள் காரிலுள்ள எந்தத் திருத்த வேலைகளையும் பற்றி இனிக் கவலைப்படாதீர்கள்! தொலைபேசியில் அழைத்து வேல்-ராஜன் என்ற இருவரில் ஒருவரிடம் தமிழில் பேசி உங்கள் திருத்த வேலைகளைச் செய்து கொள்ளுங்கள்! உங்கள் கவலை முடிந்தது.

Ask for Vel or Rajan

020 8640 1230 / 020 8640 8000
07860 226 476 / 07860 770 945
UNIT 5, 339 LONDON ROAD, MITCHAM, SURREY CR4 4BE

சிவகுமாரன் தமிழ் பாடசாலை 5வது ஆண்டு விழா

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட Tooting Diamond Palace, Croydon Mithus (நகை மாளிகைகள்) நிறுவனங்களின் உரிமையாளரும், தமிழ் உணர்வாளருமானமான எஸ்.யோகநாதன் உரையாற்றுவதை யும், போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு அவர் பரிசில்கள் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். படப்பிடிப்பு: ஏ.எஸ். குகன்

குறொய்டல் Selhurst Boys School இல் இயங்கும் சிவகுமாரன் தமிழ் பாட சாலையின் 5வது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும், அதே பாடசாலை மண்டபத்தில் சமீபத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. தமிழுடன் கலை வகுப் புகளும் 11+ போன்ற வகுப்புகளையும் இப் பாட சாலை நடாத்தி வருகிறது.

இப் பாடசாலையின் வயலின் ஆசிரிய ராக கடமையாற்றும் தமிழ்நாடு பிரபல வயலின் வித்துவான் பாலசுப்பிரமணிய த்தின் சிறார்களின் வயலின் இசையுடன் விழா ஆரம்பமானது. தமது ஆசிரியரின் தாளத்துக்கு அவர்களின் ஒருமித்த வய லின் இசை இனித் தன.

சங்கீத வித்துவான் கலா யோகாராஜா, நடனஆசிரியை வினோதினி சண்முக நாதன், வயலின் ஆசிரியை சரோஜா ஸ்ரீதரன், மிருதங்க ஆசிரியர் விஜயரா ஜா ஆகியோரின் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றது. திருமதி ராஜநாதன் பயிற்சி அளித்து மாணவர்கள் நடித்த 'பண்டார வன்னி யன்' நாடகமும், வயலின் ஆசிரியர் பாலசுப்பிரமணியத்தின் வயலின் இசை விருந்தும் பலரையும் கவர்ந்தது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண் ட Tooting Diomond Palace, Mithus நிறுவனங் களின் அதிபர் யோகநாதன் பேசுகை யில்-,தமிழீழ விடுதலை போராட்டத்தின் முன்னோடியான சிவகுமாரன் நினை வாக ஒரு பாடசாலையை அவரது நண்பர்கள் இங்கு ஆரம்பித்து, இங்கு ள்ள சிறார்களுக்கு கல்வியை ஊட்டு வது பெருமையாக இருப்பதாகக் குறிப் பிட்டார்.

சிவகுமாரன் பாடசாலை நிர்வாக சபைத் தலைவர் வண ஆசைநாயகம் சிறப்பு ரையாற்றினார்.

பாடசாலை அதிபர் வில்வராஜா பாடசாலையின் நோக்கத்தையும் எதிர்காலத்திட்டத்தையும் விளக்கினார்.

பாடசாலை 10.09.2005 இல் மீண்டும் ஆரம்பமாகிறது. இப் பாடசாலையில் சேர்ந்து பயன் பெற விரும்பும் சிறார்கள் தொடர்பு கொண்டு விபரங்களை அறி யலாம். **அதிபர் வில்வராஜா:**
020 8771 6899& 07958 408 280

சட்டங்களை இறுக்கி தேசத்துக்குப் பாதுகாப்பு வேலி..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வெவ்வேறு வித்தியாச மான நாகரீகங்களை உலகம் கண்டிருக்கிறது. வாழ்வுச்சூழல் மொழி மற்றும் தனித்துவங்களின் அடிப்படையில் அவை சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன. ஒரு இனக்குழுமத்தின் கலாசார விழுமிய ங்கள் மறு குழுமத்திற்கு வினோத மாகப் படலாம். எனினும் இது அவ்வவ் நாகரீகங்களில் மறுக்க முடியாத அங்கமாகவே இருக்கும்.

ஆனால் ஐரோப்பிய மற்றும் ஆங்கிலோ அமெரிக்கா நாகரீக விழுமியங்களை மையப்படுத்தி அதில் அமர்ந்துகொண்டு இஸ்லா மிய நாகரீகங்களை ஒப்பிட்டு பார்ப்பதும் அதனை குறைபாடு உடையதாகக் கருதுவதும் இன்றைய பிரச்சினையின் அடிப்படைக் காரணங்களுள் ஒன்றாகும்.

ஈராக்கோ, சிரியாவோ ஜன நாயகத்துடன் இருக்கவேண்டுமா அல்லது முடியாட்சி இருக்கலாமா என்பதை தீர்மானிக்கும் அதிகாரத் தை அந்நாட்டுக் குடிகளே கொண் டிருக்க முடியும். வெளிச்சக்தி ஒன்று அதனைத் தீர்மானிக்கக் கூடாது. ஏனென்றால் அங்கு மக்களாட்சி என்று கூறப்படும் ஒன்று தேவை என்று களத்தில் இறங்கிய அமெரிக்க அதிபரால் அழிவுகளைக் கொண்டு வர முடிந்திருக்கிறது. சதாமின் ஆட்சியை விட பன்மடங்கு அழிவு களை கடந்த வருடங்களில் ஈராக் கண்டிருக்கிறது. அவரவர் பாரம் பரியப்படி வாழும் உரிமையில் மற்றவர் அதிகாரம் செலுத்தி மாற்ற முனைவதன் விளைவை இன்று உலகம் அனுபவிக்கிறது.

மதங்கள் அரசியல் மயப்படுத்தப் பட்டால் அவற்றின் தத்துவங்கள் துஷ்பிரயோகம் . செய்யப்படும் என்பதற்கு இஸ்லாம் இன்று உதார ணமாகி இருக்கின்றது. ஆனால் 'பயங்கரவாதத்தின் மீதான யுத்தம்' என்ற ஜோர்ஜ் புஷ்ஷின் பிரகடனம் முஸ்லிம் அரசுகள் தம்மோடு அணி சேர்ந்ததால் அவை ஆட்சியில் நீடிக்க தமது ஆங்கிலோ அமெரிக்க விழுமியங்களும் அதன் நிறுவனங் களும் உதவும் என மறைமுகமாக அரசியல் மயப்படுத்தப்படுவதற் கான அழைப்பு இஸ்லாமுக்கு விடுக்கப்படுகின்றது.

பிரிட்டனைப் பொறுத்தவரை இஸ்லாமிய கடும் போக்காளர்கள் புதிய சட்டங்களின் கீழ் பெரும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகப் போ கின்றனர். பிரதமர் ரொனி பிளே யாரின் 'பயங்கரவாத எதிர்ப்புப் பொதி' மனித உரிமை சட்டத்தில் கூட மாற்றங்களை செய்யவுள்ளது.

பள்ளிவாசல்களை மூடுதல், முஸ்லிம் நிறுவனங்களின் செயற் பாடுகளை முடக்குதல், பயங்கர வாதத்துடன் எந்த விதத்திலேனும் தொடர்பு பட்டிருப்பின் அவர் களின் புகலிட கோரிக்கையை நிரா கரித்தல்; அடையாளப்படுத் தப்பட்ட இணைத்தளங்கள்; நூல் நிலையங்களுக்குச் சென்றால் கைது செய்தல், சில மத போதகர் களை நாட்டுக்குள் வரவிடாமை; விசாரணை இன்றி தடுத்து வைத் தல் என்ற பல கடும் சட்ட விதிகள் விரைவில் அமுலுக்கு வரவுள் ளன. இந்த யோசனைகள் பாரிய எதிர்ப்புகளுக்கு இன்னமும் ஆட் படவில்லை.

ஆனால் பல்லினச் சமூகத்தில் ஒற்றுமைக்கும் மனித உரிமைச் சட்டத்தின் உயிர்நாடிக்கும் இவை பங்கத்தை உருவாக்கும் என்று சிலர் கூறுகின்றனர்.

பயங்கரவாதம் அதன் சகல மட்டங்களிலும் எதிர்க்கப்படும் என்றும் அதன் மூல எதிர்பார்ப்புக் கள் சிதைக்கப்படும் என்றும் பிளேயர் கூறுகின்றார். அமெரிக்க அதிபர் புஷ்ஷும் தமது பணி இன்னமும் நிறைவு பெறவில்லை என்று கூறுகின்றார். இருப்பினும் இவர்களின் இந்த அணுகுமுறை வெற்றிபெறுமா என்பது கேள்விக் குரியதே.

சட்டங்களை இறுக்குவதன் மூலம் தேசத்திற்கு பாதுகாப்பு வேலி யிட முடியும் என்ற கருதுகோள் முகம் தெரியாத எதிரியிடம் செல் லுமா என்று தெரியவில்லை. ஆனால் இது எப்போதும் அச்சத் துக்குள் வாழும் புதிய வாழ்வுச் சூழலை நிரந்தரப்படுத்துகிறது என்பது மட்டும் உண்மை.

ஐ.நா.வின் முடிவினை மீறி வரலாற்றில் எப்போதும் காணாத மக்களின் எதிர்ப்புப் பேரணிகளை மீறித்தான் ஈராக் மீதான யுத்தம் தொடுக்கப்பட்டது. பேரழிவு ஆயுத ங்கள் இருக்கின்றதாக கூறப்பட்ட காரணம் பொய் என தெரிய வந்ததும்கூட சர்வதேச சுயாதீனத் தீர்வுகளை புறம்தள்ளித்தான் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

பிளயர், புஷ் இருவருமே நடந்து முடிந்த தேர்தல்களில் வெற்றி பெற்றாலும் ஈராக் மீதான யுத்தம் தமக்கு அரசியல் களங்கத்தை ஏற்படுத்தியதை ஏற்றுக்கொண் டிருந்தனர். உலகளாவிய வெப்பம் அதிகரிப்புக்கு தடை ஏற்படுத்தும் ஜீ8 யோசனையை அமெரிக்கா நிராகரித்திருக்கிறது. இப்படி முன்னுக்குப் பின் முரணான தமது முடிவுகள் தவறானவை என தெரிந்த நிலையிலும்கூட இவர்கள் தொடர்ந்தும் மேலாதிக்க சிந்த னைப் போக்கினைக் கடைபிடிப்பது ஆரோக்கியமான நிலைக்கு உலகை இட்டுச் செல்லமாட்டாது.

அதே போன்று அப்பாவிகளின் இரத்தத்தால் தமது ஆன்மீக பீடங் களை சுத்தம் செய்ய முனைவும் பிற்போக்குவாதிகள் வன்முறை களைக் கைவிட்டு பேச்சுக்களுக்கு வர முயல்வதன் மூலமே சமூக அழிவுகளை நிறுத்தவும் ஒரு தீர்க்க தரிசி கூறியது போன்று கத்தோலிக்க - முஸ்லிம் சமய யுத்தம் இடம் பெறாது தடுக்கவும் வழி ஏற்படும். இஸ்லாம் அதற்கேயுரிய விழுமியங் களை பின்பற்றவும் ஆங்கிலோ அமெரிக்க நாகரீக விழுமியங்கள் அதில் நுழைக்க முயற்சிக்கப்படுவது நிராகரிக்கப்படவும் வேண்டியதும் அவசியமாகிறது.

மூலிகைகளின் மகத்துவம்

உலகத்தில் புதுப்புது நோய் கள் தோற்றம் பெறும் சம காலத்தில் மருத்துவ உலகமும் பல் வேறு மாற்றங்களையும் முன்னேற் றங்களையும் காண்கின்றது. மேலைத்தேய, ஆங்கில மருத்துவ முறைகளுக்கு மாற்றீடாக மூலிகை, ஆயுர்வேதம், ஹோமியோபதி, அக்யூபஞ்சர், யூனானி, சித்த வைத் மாற்று மருத்துவமே நிறைவேற்று கிறது.

வளர்ந்து வரும் நாடுகளில் மூன்றில் ஒரு பங்கினருக்கு போது மான அத்தியாவசிய மருந்துகள் கிடைப்பதில்லை. இந்நாடுகளுக்கு மாற்று மருந்துகளே ஒரே தீர் வாகும்.

மருத்துவர் அஞ்சலா ஜெகநாதனின் புதிய மூலிகை மருத்துவ நிறுவனத்தை குறொய்டன் மேயர் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கிறார்

திய முறைகள் செல்வாக்குப் பெற்று வருகின்றன. இவை Who வினால் மாற்று மருந்துகள் என அடை யாளப்படுத்தப்படுகின்றன. இயற் கையோடு இணைந்த, பக்க விளைவு கள் குறைவான; நோய்களை அநேக மாக முற்றாக நீக்கிவிடக்கூடிய தன்மைகள் இவற்றின் சிறப்பம்சங் களாகும்.

சான் பிரான்சிஸ்கோ, லண்டன், தென்னாபிரிக்க போன்ற இடங் களில் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் 75 வீதம் ஆனோர் மாற்று மூலமாக மருந்துகளையே பாவிக்கின்றனர்.

மூலிகை மருந்துகளுக்கான உலகளாவிய சந்தையின் பெறுமதி 60 பில்லியன் அமெரிக்க டொலர் களாகும். இது நிலையாகவும் முன் னேற்றகரமாகவும் இருக்கின்றது. மாற்று மருந்துப் பொருட்களுக்கு ஐக்கிய இராச்சியத்தில் வருடாந்தம் 230 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகின்றது.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆரம்ப மருத்துவ தேவைகளின் 80 வீதத்தை

கொரியா, வியட்னாம், சீனா முதலிய நாடுகள் தமது தேசிய மருத்துவத்துறையினர் மூலிகை மருந்துகள் உள்ளிட்ட மாற்று மருத்துவத்தை பூரணமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

விரைவில் பிரிட்டன், அமெரிக் கா, அவுஸ்திரேலியா நாடுகளும் இதனை அமுலுக்கு கொண்டு வர லாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் இன்னுமொரு முக்கிய விடயம் தமிழர் பங்களிப்புகள்.

மூலிகை மருத்துவத் துறையில் தமக்கென முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள மருத்துவ நிறுவனமாக தமிழரின் Herba Naturalle திகழ்கின்றது.

நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் அறிவுடன் மேலைத்தேய தரத்தில் மருந்துகளை தயாரித்து வழங்குவதில் மூலிகை மருத்துவர் **அஞ்சலா ஜெகநாதனின்** இந்நிறுவனம் அனுபவமும் சிறப் புத் தேர்ச்சியும் பெற்றுள்ளது.

உங்கள் ராசிக்கு எப்படி?

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் ரீதியில் சற்று அலைச்சல் வேலைப்பளு என்பன அமையும். தேவையற்ற வீண் பிரச்சனைகளால் தொல்லைகள் அதிகமாகும். உடன் சுகயீனங்கள் மருத்துவ செலவுகள் என்பன அமையும். கடன் பிரச்சனை கள் சற்று இழுபறி தாமத நிலைகள் கொடுக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் நிதானமான செயல் வேண்டும். மாணவர்களின் கல்வி நிலையில் சற்று கவனம் எடுக்க வேண்டும். 19ம் 23ம் 28ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் உண்டு.

கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறுசிறு இழுபறி தாமத நிலைகளின் பின் வெற்றிகள் அமையும். தொழில் ரீதியிலே சற்று அலைச்சல் வேலைப் பளு என்பன அமையும் நிலையுண்டு. எந்த விடயங்களிலும் எடுத்தவுடன் வெற்றி அமைய வாய்ப்பு இல்லை. குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபகாரிய அனுகூலங்களும் அமையும். கடன் பிரச்சனைகள் ஓரளவிற்கு சமூக மான நிலைகள் கொடுக்கும். மாண வர்களின் கல்வி நிலையில் ஓரள விற்கு முன்னேற்றம் அமையும். 19ம் 23ம் 28ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் அமையும்.

மீனம்

மீனராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு நற்பலன்கள் அமைய இட முண்டு. முயற்சிகளில் சற்று நிதான மான செயற்பாடு இருப்பது மிக நல்லது. தொழில் ரீதியில் சற்று அலைச்சல் வேலைப்பளு என்பன அமையும். காரியத்தடைகள், இழு பறி நிலைகள் என்பன இடையிடை யே ஏற்பட்டு மறையும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் நிதானம் வேண்டும். கடன் பிரச் சனைகள் சற்று அலைச்சல் நிலை களை கொடுக்கும். மாணவர்களின் கல்வி நிலையில் சற்று கவனம் வேண்டும். 21ம் 23ம் 30ம் திகதிகளில் அனுகூலமான பலன்கள் அமையும்.

ttn தமிழ் ஒளி

6 ஆவது திசையை நோக்கி

தூரத்தில் இருக்கும் நம் உறவுகளை ttn ஊடாக.

உங்கள் வரவேற்பறைக்கு அழைத்துவரும்

தமிழீழத் தேசியத்தொலைக்காட்சியைக் கண்டுகளிக்க

£10*

* MINIMUM 3 MONTHS.

For New Customers Only

பொழுது புலர்ந்தது

புதியன வந்தன - வந்தவை

எல்லாம் வசந்தமே - இனி

வருபவை எல்லாம் புதுவசந்தமே!

தேசத்தின் மாட்சியுடன்

தாயகத்தின் காட்சிகளையும் புலம் பெயர் மண்ணில்

எம் உறவுகளின் புதுப்புது நிகழ்வுகளுடன்

24 மணிநேரமும் உங்கள் இல்லங்களில்.

020 8100 0000 www.tvttn.com

65 வருடங்களாக இசைமழை

சதாபிஷேகம் காணும் இசை மேதை சாவகச்சேரி பஞ்சாபிகேஷன்

இணுவையூர் சிவ–பத– நவேந்திரன்

தமிழரை அடையாளம் காட்டுவது எமது கர்நாடக இசை, அதிலும் குறிப்பாக நாதஸ்வரம், தவில் என்பன. இன்னுமொரு சிறப்பம்சம், தமிழர் விழா எதுவாக விருப்பினும் நாதஸ்வர, தவில் கச்சேரி, விழாவின் ஒரு பங்காக அமைவது.

சில அபூர்வ மனிதர்களின் தனித் தன்மையில் அவர்கள் பிறக்கும் ஊரிற்குப் பெருமை. அதேபோல் சிறப்பம்சம் பொருந்திய ஊரால், அங்கு பிறப்போர்க்குப் பெருமை. இதில் சாவகச்சேரி பஞ்சாபிகேஷன் முன்னைய வரைவிலக்கணத்தில் அடங்குபவர் என்றால் அதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. சாவகச்சேரி என்றதும் எமக்கெல்லம் உடனே ஞாபகத்திற்கு வருவது, அழகான குடுமியுடன் தோன்றும் M. பஞ்சாபிகேஷன் அவர்களே. 1960-1970 ஆண்டுகளிற்கு முன்னர், இசைவேளாளர்களை அடையாளம் காட்டுவது குடுமி, சொருகு கொண்டை, கடுக்கன் என்பன. பின்னர் இவை அற்றுப் போனாலும், இன்றும் பழமை காத்து வருவர் இந்தப் பெருமகனார். இசை வேளாளர்களுக்கு இருக்கும் இன்னுமொரு அடையாளம் தாம்பூலம் (வெற்றிலை) போடுவது. இதற்கு மட்டும் இவர் விதிவிலக்கு. இசைக்கலைஞர்களுக்கு சாபக்கேடாய் இருப்பது குடிப்பழக்கம். இப்பழக்கத்தால் பல இசைமேதைகளை நாம் இழந்திருக்கிறோம். இதற்கும் இவர் விதிவிலக்கு.

1970களின் ஆரம்ப காலப்பகுதியில் "பாரி", "திமிலி" என்ற நாதஸ்வரப்பாகு பாடு எழுந்து, இசை வேளாளர் பரம்பரையையே ஆட்டம் காணவைத்தது; உறவுகளைப் பிரித்தது; சகோதரர்களாக கூட்டுக் கச்சேரி செய்தவர்களிடையே பகைமை காண வைத்தது. பாரியே சிறந்தது, திமிரியே சிறந்தது என இக்கலைப்பரம்பரை இரண்டு பட்போது, காலா காலமாக பழக்கத்தில் இருந்த, பாரியையே தொடர்ந்து வாசித்து பெருமைகாத்த பண்பாளர் இவர். பாரி என்பது இரண்டரைக் கட்டைக் சுருதி கொண்ட

நீண்ட - குழல், திமிரி என்பது ஒரு கட்டைச் சுருதி கொண்ட - சினக் குழல். இக்காலப்பகுதியில் வந்த வகுப்பு வாதத்தில் அகப்படாமல் தனித்துவம் காத்ததிலும் இவர் விதிவிலக்கு.

தவில் மாமேதை லயஞான குபேர பூபதி இணுவையூர் தட்சணாமூர்த்தி இந்தியாவில் சிலகாலம் தங்கி, பின்னர் தனது இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் M. பஞ்சாபிகேஷனுக்கு மட்டுமே தவில் வாசிப்பேன் என்ற பெருமைக்குச் சொந்தக்காரனாகி மற்றைய கலைஞருள் மீண்டும் விதிவிலக்காகியவர் இவர்.

தவில், நாதஸ்வர வித்துவான்கள் தமது இளமைக் காலத்தில் விற்பனர்களாகி, நடுத்தரவயதில் கால அனுபவத்தால் புகழின் உச்சிக்குப் போய், பின்னர் வயது போனபின் கோவில் தவில், நாதஸ்வர்களாக மாறுவது காலத்தின் நியதி. இதிலும் M. பஞ்சாபிகேஷன் விதிவிலக்கு. பல்லும் போனால் சொல்லுப் போகும் என்பது பழமொழி. இன்னும் முன்வாயில் ஒரு பல்லுடன், குழலினிமை குன்றாது, தொடர்ந்து 65 வருடங்களாக இசைமழை பொழிந்து வருவதிலும் இவர் விதிவிலக்கு.

ஒட்டு மொத்தத்தில் விதிவிலக்கு என்ற தமிழ்ச் சொல்லிற்கு தமிழக ராதியில் M. பஞ்சாபிகேஷன் என்று போடுவதற்கு எல்லாவிதத்தில் தனித்துவம் காத்து விதி விலக்காக இருப்பவர்.

இந்தியாவில் இருந்து வந்த பல புகழ்பூத்த கலைஞர்களோடு, குறிப்பாக காரைக்குறிச்சி அருணாசலம் போன்றவர்களுடன் சரிநிகராக நாதஸ்வரம் வாசித்த பெருமை இவருக்குண்டு.

போராட்ட காலத்தில் விழைந்த அனர்த்தங்களில் சாவச்சேரி முற்றாகப் பாதிக்கப்பட்டபோது, தனது மூத்தமகள் M.P. நாகேந்திரன் அவர்களோடு தலைநகரிற்கு இடம் பெயர்ந்தது காலத்தின் நியதி. யாழ் இசை விரும்பிகளிற்கும், இவரிடம் பாடாந்தரம் கற்கவேண்டிய இளம் இசை வேளாளர் பரம்பரைக்கும் ஒரு இழப்பே.

இவர் பெற்ற பதக்கங்களும், பட்டங்களும், பாராட்டுதல்களும் எண்ணிலடங்காதவை. குறிப்பாக திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 50 ஆண்டுகட்கு மேலாக ஆஸ்தான வித்துவானாக இருந்த காலத்தில் வழங்கப்பட்ட "இசை வள்ளல்", "நாதஸ்வர கலாமணி" என்பவையும், முன்னை நாள் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமட் காலத்தில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட "நாதஸ்வர கான வாரிதி" என்ற பட்டமும், இராசதுரை அமைச்சராக இருந்த காலத்தில் இந்து கலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்ட "ஸ்வரஞான திலகம்" எனும் பட்டமும், இலங்கை அரசினல் அதியுயர் பட்டமான "கலாபூஷணம்" என்ற விருதும், அகில இலங்கைக் கம்பன் கழகத்தினால் வழங்கப்பட்ட "இசைப் பேரறிஞர்" என்ற விருதும் குறிப்பிடத்தக்கன.

அந்தக்காலத்தில் பிரபல்யமாக இருந்த சாவகச்சேரி நாதஸ்வர வித்துவான் முருகப்பா சின்னப் பிள்ளை தம்பதியினருக்கு அருமகனாக 1924ம் ஆண்டு ஜுலை 1ம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்ப பாடாந்தரத்தை சோடி நாதஸ்வரம், சோடித்தவில் என்ற புரட்சியைச் செய்த (ஒரு நாதஸ்வரத்திற்கு ஒரு தவில் என்றிருந்தகாலமிது) பிரபல்ய நாதஸ்வரச் சகோதரர்கள் சண்முகம் பிள்ளை, அப்புலிங்கம்பிள்ளை

(19ம் பக்கம் பார்க்க)

தமிழீழ நீதித்துறைக்குப் புத்தகங்கள்

தமிழீழ நீதித்துறைக்கும், அதன் சட்டக் கல்லூரிக்கும், சட்டவியல் சம்பந்தமான புத்தகங்கள் தேவைப்படுகின்றன. (ஐக்கிய இராச்சிய சட்டத்துறை சம்பந்தமான புத்தகங்கள்) புத்தகங்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர், பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ரஞ்சன்: 07883 040 709
079930 676 808

தமிழீழ நீதித்துறை பற்றிய விபரங்களை www.eelamjudicial.org எனும் இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரித்தானியக் கிளை பெருமையுடன் வழங்கும்

10 ஆம் ஆண்டு
உரும்பிராய் பாடசாலைகளின் ஒன்றுகூடல்

Cultural Programmes, Live Music & Dinner

காலம்: 10th September 2005, நேரம்: 6.00 pm
இடம்: Wembely High School, East Lane, Wembley, Middlesex.

எமது வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 10.09.2005 அன்று நடைபெற இருக்கின்றது அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நுழைவுச்சீட்டுகள் Adult: £10.00 Children 5.00 (Under 16 years)

மேலதிக விபரங்களுக்கு M.T. செல்வராஜா 020 8578 3019
சி. சத்தியானந்தன் 020 8848 8249
வி. மயூரன் 020 8621 5998

ஜெகதீஸ்வரம்

லண்டன் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

பெருமையுடன் வழங்கும்

நாட்டியாஞ்சலி 2005

நடுவர்கள்: திரைப்பட நடிகைகள் பானுப்பிரியா, சுகன்யா

உலகம் தழுவிய மாபெரும் நடனப்போட்டி
பரதநாட்டியம் கிராமிய நடனம்

தங்கநந்திக்கான
நடனப்பள்ளிகளுக்கிடையில் குழு நடனப்போட்டி

பங்குபெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

020 8704 0708 – 07931 600 385
1St Floor 313 Merton Road, Wandsworth SW8 5JS

கனக துர்க்கா மாதா ஜோதிட நிலையம்

Astro Palmist

ஜாதகம் கைரேகை பார்த்து நடந்தது, நடக்கின்ற, நடக்கப்போவதை துல்லியமாக கணித்துக் கூறப்படும்.
இந்தியாவிலிருந்து வெங்கடாசலம் ஜோதிடர் இலண்டனுக்கு வருகை தந்துள்ளார்.
இவர் பல உலக நாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.

● பிறப்பு முதல் ஆயுள் வரையிலான நற்பலன்களை விபரமாகக் கூறுவார் ● முகராசி சாஸ்த்திரத்தில் பிரபல்யம் வாய்ந்தவர் ● குடும்பம், வியாபாரம், கல்வி, விசா, திருமண விடயங்கள் பற்றி அறியலாம் ● குழந்தைச் செல்வங்கள் கிடைக்கும் காலம் பற்றிய விபரங்கள் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குவார்.

உங்கள் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் சுலகமாகத் தீர்வு காணலாம்.
உங்களுக்கேற்ற ராசிக்கல் பற்றிய விபரமும் கொடுப்பார் ● சகல தோச நிவாரணங்களும் செய்வார்

Opening Hours: 9.00 am - 8.00 pm

Visiting Place:

C/o Corners - 274 Mitcham Road, Tooting, London SW17 9NT - (Monday to Wednesday)

மரக்கறிகடை – Best Fruit & Veg (Sakonis) - 204-208 Upper Tooting Road, Tooting SW17 7EW, (near Muthu Maari Amman Temple) -(Thursay to Sunday)

Mobile: 07958 655 018

மூலிகைகளின் மருத்துவம்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானியர்கள் மத்தியில் மட்டுமல்லாது ஐரோப்பிய தமிழ் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும் செல்வாக்கையும் பெற்று வரும் அவர் ஐக்கிய இராச்சியத்தின் நீண்ட வரலாற்றையும் சர்வதேச தரத்தையும் கொண்ட மூலிகை மருத்துவர் சங்கத்தின் உறுப்புரிமையைப் பெற்றவர்.

நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மூலிகை மருந்துக்கலவை உருவாக்கங்கள் மேற்கொள்ளும் அங்கீகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தீபம் தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி ஊடாக இலவச மருத்துவ மற்றும் போஷாக்கு ஆலோசனைகளை அவர் இலவசமாக வழங்கியும் வருகின்றார். இது மாற்று மொழிபேசும் மருத்துவர்களுடன் உரையாடி தெளிவுபடுத்தவோ தெளிவுபெறாவோ முடியாத பெருமளவான தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

லண்டனில் தமிழர் செறிந்து வாழும் குறொய்டன், நோபறியில் பொதுப்போக்குவரத்துக்கள் மூலம் இலகுவாக சென்றுவரக் கூடிய இடத்தில் புதிய இயற்கை மருத்துவ நிலையத்தையும் அவரது 'ஹேர்பா நெச்சுரல்' நிறுவனம் அமைத்துள்ளது.

மருத்துவ ஆலோசனைகள் மட்டுமன்றி தமது சொந்த மருந்து படிமங்களுடன் உலகின் முன்னணி மூலிகை மருந்து நிறுவனங்களின் மருந்து மற்றும் போசாக்குணவுப் பொருட்களும் அங்கு காணப்படுகின்றன. கடந்த ஒகஸ்ட் 1ம் திகதி குறொய்டன் மேயர் அவர்கள் இந்நிலையத்தை திறந்து வைத்து பேசும்போது இப்படியொரு மூலிகை, இயற்கை மருத்துவ நிலையத்தின் தேவையை ஹேர்பா நெச்சுரல் தீர்த்து வைப்பதாகக் குறிப்பிட்டார்.

மகப்பேறின்மை, பெண்களின் பிரச்சினைகள், சருமநோய்கள், தலைமுடி உதிர்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு அவரது மருத்துவம் சிறப்பான தீர்வினைக் கண்டுள்ளது. இல. 1410 London Road, Norbury SW16 4BZ, UK என்ற முகவரியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள இயற்கை மருத்துவ நிலையத்திலோ அல்லது 020 8765 9015 என்ற தொலைபேசி இலக்கத்திலோ அவரது சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மருத்துவ உலகின் உச்சத்தில் இருக்கும் மேலை நாடுகளில் தமிழர் பாரம்பரிய வைத்திய முறையான மூலிகை மருத்துவத்தை சர்வதேச தரத்தில் எமது மக்களுக்கு வழங்குவதே தமது நோக்கம் என்கிறார் ஹேர்பா நெச்சுரல் பணிப்பாளர் திரு. எச். ஜெகநாதன்.

லண்டனில்
பரதநாட்டியம்- வீணை
பயில ஒரு வாய்ப்பு.
அனுபவம் வாய்ந்த
ஆசிரியர்களால்
பயிற்றப்படுகிறது.
020 8767 8004

தாயடிக் கதகம்மா

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றால் "கெதியாய் ஓடடா! ஓடடா! பின்னலை வாறங்கள்" என்று உணர்ச்சி வசப்பட குரல் கொடுக்கும் பழசுகளையும் அவதானித்துள்ளேன். வகுப்பில் ஆசிரியர் இராமாயணம் படிப்புக்கும் பொழுது, "அண்ணனும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்று பாடம் எடுத்தார். அந்த நாட்களில் நாங்கள் அதை நடைமுறைப்படுத்தியிருந்தால் கண்ணுக்குள் மிளகாய் துளைத்தான் தூவி இருப்பார்கள். **கிருஷ்ணன் செய்தால் லீலை. நாம் செய்தால் பொறுக்கி. முருகன் கோவில் பூங்காவமென்றால் வள்ளியைக் கிளப்ப முருகன் பூந்தோட்டத்துள் புகுந்தால் அரோகரா சத்தம்.** அப்படியிருக்கும் பொழுது நிஜ வாழ்க்கையில் ஏன் காதலுக்கு வரவேற்பு இருக்கவில்லை?

சீதனக் கொடுமையா? கலாச்சாரக் கட்டுப்பாடா? ஒழுக்கமென்ற சிந்தனையா? அல்லது காதலென்பது நிஜமாகவே நெருப்பா? அப்போது காதலித்தவர்கள் ஒழுக்கம் தவறியவர்களா? அல்லது மனதுக்குப் பிடித்தவரைக் காதலிப்பது குற்றமா? உண்மையான காதலென்றால் என்னவென்று தெரியாமல், பல கலப்படங்கள் உருவாகி, காதலின் பெருமையைக் கெடுத்ததா? யாராவது சொல்லுங்களேன்! இந்தக் கிழவி மண்டையைப் போடும் பொழுதாவது விடையைத் தெரிந்து கொண்டு போகட்டுமே!

(பெயர்கள், பாத்திரங்கள் யாவும் கற்பனை)

லண்டனில் (Tooting) முதலாவது தமிழர் சலூன்
ரோயல் சலூன்
ROYAL BEAUTY PARLOUR
பெண்களுக்கான இந்த அழகு நிலையத்தில் பணியாற்றுவதற்கு (பயிற்சி பெற்ற) தமிழ் பெண்கள் தேவை. விண்ணப்பிக்க
159 Upper Tooting Road, London, SW17 7TJ
Tel: 020 8672 7262, 0790 301 3374

லண்டனில் பிரபல இந்தியப் பாடகர்
வி.ஏ. அரவிந்தக்ஷன்!
கர்நாடக இசைக்குப் பெருமையும், சிறப்பும் அளிப்பதற்கென்றே பிறந்த பிரபல இந்தி சங்கீதக் கலைஞர் **வி.ஏ. அரவிந்தக்ஷன்** மேற்கு லண்டன் தமிழ்பாடசாலையில் கடமையாற்றுகிறார். இவரிடம் தனிப்பட்ட முறையில் சங்கீதம் பயிலவும், பரத நாட்டிய ஆசிரியைகள் ஜதிகள் பயிற்சி பெறவும் முடியும். விபரங்கள் அவருடம் பேசி அறியலாம்.
தொடர்புகளுக்கு: 0790 681 9857

மணப் பந்தல்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விபரங்களுடன் வெளியிடுவோம். ஒரு விளம்பரத்துக்கு £10 பவுண்கள் மட்டுமே அறவிடுவோம். காசோலை அல்லது போஸ்டர் ஓடர் மூலமாக EELAKESARI என்ற பெயருக்கு வெளியாக வேண்டிய விபரங்களை எழுதி தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

மணப் பந்தல் - PUTHINAM, 38 Moffat Road, London SW17 7EZ

65 வருடங்களாக..

(18ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களிடம் பெற்றார். பின்னர் புகழ்பூத்த நாதஸ்வர மேதை P.S. ஆறுமுகத்தின் தமையனார் P.S. கந்தசாமிப்பிள்ளையிடமும் பெற்று, மேலதிக பயிற்சிக்காக இந்தியா சென்று நாதஸ்வரத்திற்கு வரைவிலக்கணம் அமைத்த திருவாவடுதுறை இராஜரட்ணம் பிள்ளையின் மருமகனார் தக்காய் நடராஜ சுந்தரம்பிள்ளையிடமும், ஐயம்பேட்டை வேணுகோபால் பிள்ளையிடமும் பெற்று மெருகேற்றிக் கொண்டார்.

தனது பதினான்காவது வயதில் பருத்தித்துறை சித்தி வினாயகர் ஆலயத்தின் தனது முதற் கச்சேரியைத் தொடங்கிய இவர், 65 வருடங்களாக தொடர்ந்து ஆற்றிவரும் இசைத் தொண்டு பிரமிக்க வைக்கிற்று.

இவரது சதாபிஷேக பிறந்த நாள் விழாவை பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி ஜுன் 25ம் திகதி திருக்கடவூர் அபிராமி ஆலயத்திலும், பிறந்த நாளான ஜுவை 1ம் திகதி, தங்கள் குடும்ப குல ரிதஸ்வமான சாவச்சேரி சங்கத்தானை இராக்கச்சி அம்மன் ஆலயத்திலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இலங்கைத் தமிழர்களின் பொதுச் சொத்தான இவர், மேலும் பல்லாண்டு காலம் தொடர்ந்து இசைப் பணி தொடர நாம் எல்லோரும் வாழ்த்தி நிற்போம்.

உண்மைகள் உறங்குவதில்லை

(9ம்பக்கத் தொடர்ச்சி)

சனீஸ்வரன்கள்

எப்படித் துன்பங்களை ஏற்படுத்துவது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் அப்படிச் செய்யாவிடில் எங்கே பரமன் எனது பதவியைப் பறித்து விடுவானோ என்று பயமாக இருக்கிறது. இதற்கும் மேலாக - இவர்களுடன் நான் வாசம் செய்யும் போது எங்கே இவர்களின் புத்தி எனக்கு வந்து விடுமோ என்று பயமாக வேறு இருக்கிறது!

துன்பங்களை உருவாக்குவதில் தன் கணவனுக்கு நிகர் எவருமில்லை என்று இதுவரை இறுமாப்புடன் இருந்த சனி பகவானின் மனைவி முதல் முறையாகச் சிந்திக்கிறாள்:

சனியையே கலக்கும் சனீஸ்வரன்கள் பூலோகத்தில் வசிக்கிறார்கள்!

அபஸ்வரம்

"It was a stupid song by a stupid poet Dad. I cannot even remember that fellow's name. It is a funny long name anyway"

சுதலனை நோக்கும் காதலியின் முகத்தில் எவ்வாறு நாணம் பிரதிபலிக்க வேண்டும் என்று பரத நாட்டிய ஆசிரியை நடித்து விளக்கிய வகுப்பு முடிந்த பின்-மார்பகத்தை நிமிர்த்தி - வீராவேஷமாக - தன் சிநேகிதிகளிடம் உரத்த குரலில் அபிராமி கேட்டது:

"Oh my God! I do not understand why a girl should feel shy?"

டாக்டர் ரவி தனது நண்பர்களிடம் மிகவும் பெருமையாக அடிக்கடி கூறிக் கொள்ளும் ஒரு விடயம்:

நான் இலண்டனில் வாழ்ந்தாலும் எனது மகளை ஒரு தமிழ்ப் பெண்ணாகவே வளர்க்கிறேன்!

அரோகரா - இந்த அபஸ்வரத்திற்கு!

ஒரு அரோகரா மட்டுமா? இங்கு எத்தனை அபஸ்வரங்கள்! எத்தனை அரோகரர்க்கள்!

சுனாமி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபரும் கவனித்தார்.

இரு குழந்தைகளையும் பசியோடு உட்கார வைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் தானே தின்பதற்கு அந்தத் தாய்க்கு எப்படி மனம் வந்தது...

அரச அதிபருக்கு புரியவே இல்லை.

அந்தத் தாய் சற்று தூரம் நடந்து சென்று அங்கு ஒரு கிழவியிடம் கொடுத்து வைத்திருந்த தன்னுடைய ஆறுமாத கைக்குழந்தையைக் கையில் வாங்கி கீழே மணலில் உட்கார்ந்து தன்னுடைய சேலை மாராப்பை விலக்கிப் பால் கொடுக்கத் துவங்கினாள்.

அந்தக் குழந்தை ஆவலோடு கட்டிக் கொட்டியவாறு அந்தத் தாயின் மார்பகத்திலிருந்து சுரந்த பாலைக் குடிக்கத் துவங்கியது.

அரச அதிபர் கண்கள் கலங்கின.

ஓ... இந்த நான்கு குழந்தைகளின் பசியை விட அந்தப் பச்சிளம் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க வேண்டுமென்றால்... இவள் வயிறு நிரம்பச் சாப்பிட வேண்டும்... அப்பொழுதுதானே அவள் மார்பிலிருந்து பால் சுரக்கும்...

ஓ...

நாம் கூட அவரசப்பட்டுத் தவறாக நினைத்துவிட்டோமேயென்று நினைத்த அரச அதிபர் விரைந்து சென்று அந்த நான்கு குழந்தைகளுக்கும் உணவுப் பொட்டலங்கள் வழங்க ஏற்பாடு செய்தார்.

லண்டனில் கன்னடத்துப் பைங்கிளி

(10ம் பக்கத் தொடர்ச்சி)

சரோஜாதேவிக்கு இப்போது அறுபதைத் தாண்டியபோதும் இன்னும் இளமையுடனும் சுறுசுறுப்புடனும் இருக்கிறார். முகத்தில் பெரிய மாற்றம் என்று இல்லை; அதே சிரிப்பு.

ஒழுங்காக தேகாப்பியாசம் செய்கிறீர்களா? என எனது மனைவியார் வினாவியபோது "அப்படி ஒன்றுமில்லை; தியானமும், யோகா (Yoga)வும் தான் செய்து வருகிறேன்" என்கிறார்.

வாழ்க்கை வாழ்வதற்கே!

நிஜமான வாழ்க்கையில் பல துயரமான சம்பவங்களைச் சந்தித்தவர் சரோஜாதேவி. பத்து ஆண்டுகளுக்கு முன் தனது கணவரையும், பின்னர் ஒரு மகளையும் காலனுக்குக் காவு கொடுத்தார். அவரது திரை நாயகர்கள் மூவரும் இன்று உயிருடன் இல்லை. "எம்ஜியார் போயிட்டார்; சிவாஜி போயிட்டார்; சமீபத்தில் ஜெமினியும் போயிட்டார்" என ஆதங்கப்பட்டார். "தாமரை நெஞ்சம் கமலாபோல ஒரு மிடறு தண்ணீரோடு துயரங்களை விழுங்கிவிட்டு வாழ்வது தான் வாழ்க்கை."

இப்போது பொது நிகழ்ச்சிகளில் அதிகம் கலந்து கெள்வதில்லை. எப்போதாவது திருமண நிகழ்வுகளில் பழைய நடிக நடிகையர்களைச் சந்திக்க முடிகிறது. தனது குடும்பத்தினருடனே அதிக பொழுதைக் கழிக்கிறார். தனது கடைசி மகளை அமெரிக்காவில் விட்டு விட்டு வீடு திரும்பிச் செல்கையில் லண்டனில் தங்கியிருந்தார்.

'கல்யாணப் பரிசு' முதல் 'குல விளக்கு' வரை நெஞ்சைவிட்டு நீங்காத பல திரைக்காவியங்களைத் தந்தவர் சரோஜாதேவி. இப்படங்கள் உள்ளவரை அவர் ரசிகர்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார்.

SKC

SRI KANTH & Co.

Solicitors & Property Business Centre

SOLICITORS & ESTATE AGENTS

Sales, Letting & Management

PROPERTY SALES & CONVEYANCING UNDER ONE ROOF

We also practice in most areas of LAW and have been undertaking both Private & Legal Aid work since 1992

557 High Road, Wembley, Middlesex HAO 2DW

Tel: 020-8795 0648

Fax: 020-8795 0649 Mobile: 07831 195979

Opening Hours: Mon-Fri: 9am-6pm, Sat: 9.30am-5pm

MARKANDAN & CO SOLICITORS

- குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
- விவாக விண்ணப்பங்கள்
- அகதி விண்ணப்பங்கள்
- 14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள்
- பிரித்தானிய பிரஜாவுரிமை
- வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்
- விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் – No Win - NO Fee அடிப்படையில்
- பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மொழித் தேர்ச்சி தகுதிச் சான்றிதழ்

02.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

We also specialise in

☛ ஒப்பந்த தகராறுகள் ☛ நுகர்வோர் பிரச்சனைகள் ☛ உறுதி தயாரித்தல் ☛ Bankruptcy Problems ☛ மதுபான அனுமதிகள் ☛ கேளிக்கை களியாட்ட அனுமதிகள் ☛ கட்டட அனுமதிகள் ☛ Cafe அனுமதிகள்

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும், நியாயமானதும் ஆகும். ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை. வீடு தேடி வந்து ஆலோசனைகள் வழங்கவும் தயாராக உள்ளோம். வார இறுதி ஆலோசனைகளுக்கான வசதிகளும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

Markandan & Co Solicitors

Thamil House, 720 Romford Road, London E12 6BT

Tel: 0208 514 8188 / 07830 285 634 Fax: 0208 514 8303

Web: www.markandan-solicitors.com

Email: mm@markandan-solicitors.com

Premium / Cover provided over the phone

No more proposal forms to complete

No more immediate payment

No more Direct Debit Mandate to complete

No more claim form to fill

All the details are taken over the phone.
But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover.

Special deal for cheaper premium with Norwich Union

Motor Insurance

Home Insurance

Please ring us for a quotation

020 8763 2221

Fax: 020 8763 2220

P. Srinivasan

32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH

❄ Pension ❄ Life ❄ Savings ❄ Mortgages ❄ Commercial Loans

ARM Associates

FSA Financial Services Authority

www.armassociates.co.uk

E-Mail: sri@armassociates .co.uk